Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 22

சனிக்கிழமை
18 டிசெம்பர் 2021

மார்கழி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 715
மொத்தம் 578,439

**உயிரிழப்பு**
நேற்று 22
மொத்தம் 14,720

**குணமடைவு**
546,839

# வடக்கில் காலூன்ற சீனாவுக்கும் அனுமதி!



## ஒப்புக்கொள்கிறார் அமைச்சர் வாசு

வவுனியா, டிசெம்பர் 18
"வடக்கில் சீனாவும் இந்தியாவும் அபிவிருத்திகளை மேற்கொள்ள இடங்களை வழங்கியுள்ளோம். இதனால் வடபகுதி மக்கள் அதிக நன்மைகளை அடைவார்கள் என்று நீர்ப்பாசன அமைச்சர் வாசுதேவ நாணயக்கார பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

15 ➤

## இராமர் பாலத்தில் சீனத் தூதுவர் ஆராய்வு!

"இதுவே முடிவு. ஆனால், ஆரம்பமும்கூட."



கொழும்பு, டிசெ. 18
இலங்கைக்கான சீனத் தூதுவர் கீசென் ஹொங், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள இராமர் பாலத்தை நேற்று சுமார் 20 நிமிடங்களாகக் கண்காணித்தார். அதுமட்டுமன்றி, "இந்தப்பயணம் முடிவாக மாத்திரமன்றி ஆரம்பமாகவும்

15 ➤

மீண்டும் முருங்கையில் ஏறிய நில அளவைத் திணைக்களம்

## கீரிமலைக் காணி அளவீடும் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது



யாழ்ப்பாணம், டிசெ. 18
தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காங்கேசன்துறை மேற்கு மற்றும் நகுலேச்சரம் (ஜே/233, ஜே/226) கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள சுமார் 21பேருக்குச் சொந்தமான 30 ஏக்கர்

15 ➤



முச்சந்தி முரளி

"சீதையை மீட்கிறதுக்கு போட்ட பாலத்தையும் சீனம் ஆட்டையைப் போட நினைக்குதோ?"

## அனைத்து விடயங்களிலும் அரசியல் நோக்கம் கூடாது

இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 18
"உள்ளூராட்சி சபையில் அல்லது மாகாண சபையில் அல்லது நாடாளுமன்றத்தில் அனைத்து விடயங்களிலும் அரசியல் நோக்கத்துடன் செயற்பட்டால் எத

15 ➤

## இன்று ஆறு.திருமுருகனுக்கு 60 'திருமுகம்' வெளியீடு



செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனின் மணி விழாவையொட்டி 'திருமுகம் 60' என்னும் நூல் வெளியீடும் அதனோடிணைந்த இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கல் நிகழ்வும்

15 ➤

## '2022' நாவலர் ஆண்டு



(விரிவு 3ஆம் பக்கம்)

## வேந்தராகிவிட்ட தேரருக்கு பல்கலையினர் கடும் எதிர்ப்பு

பட்டமளிப்பை புறக்கணிப்போம் என எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 18
கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள நாரஹேன்பிட்டி அபயராம விகாரா திபதி வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரருக்கு, பல்கலைக்க

15 ➤

## வுவுனியா பெண் கொலை: கொலைச் சூத்திரதாரி நஞ்சருந்தியபோது கைது

வவுனியா, டிசெ. 18
வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய

15 ➤

## பிறழ்வடைகிறது ஒமிக்ரோன் நாடு அழிவைச் சந்திக்கும்!

சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 18
ஒமிக்ரோன் உள்ளிட்ட வைரஸ் பிறழ்வுகளின் பரவல் அதிகரித்துள்ளதால், நாடு எதிர்காலத்தில்

15 ➤

## எரிகாயமடைந்த பெண் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 18
தனக்குத்தானே தீ மூட்டிய குடும்பப் பெண், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார் என்று

11 ➤

## கனடா விபத்தில் இணுவில் பெண் சாவு



றொறன்ரோ, டிசெ. 18
கனடா - மிசிசாகாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்

11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





## கொரோனா விழிப்புணர்வு வீதி நாடகங்கள் மன்னாரில்

மன்னார், டிசெ.18
நாட்டில் கொரோனாத் தொற்றுப்பரவல் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டின் பல இடங்களில் விழிப்புணர்வு வீதி நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் வீதி நாடகம் நடத்தப்பட்டது. வீதி நாடகத்தில் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் தெளிவுபடுத்தப்பட்டது.

பேசாலை மூவிராசாக்கள் பட்டினம் கலைப்பட்டறை கலைஞர்களால் விழிப்புணர்வு வீதி நாடகம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. நிகழ்வில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொலிஸ் உத்தியோகத்தர், ஊடகவியலாளர்கள், மற்றும் மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-56)

### மாணவர்கள் மீதான

# ஆசிரியர்களின் துன்புறுத்தல் இரண்டு சம்பவங்கள் பதிவாகின

யாழ்ப்பாணம், டிசெ. 18

**யாழ்ப்பாண மாவட்டத்தில் மாணவர்கள் மீதான ஆசிரியர்களின் துன்புறுத்தல்கள் தொடர்பில் ஒரு வாரத்துக்குள் இரண்டு துன்புறுத்தல்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கூறியுள்ளனர்.**

தென்மராட்சி வலயத்தில், ஒரு பாடசாலையில் தரம் 7இல் பயிலும் மாணவன் ஒருவர் கடந்த 9ஆம் திகதி வகுப்பாசிரியர் தாக்கியதில் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மாணவன் காது மற்றும் உடல் ரீதியான தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டார் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி வலயத்தில், தரம் 6இல் பயிலும் மாணவர் ஒருவரைச் சித்திரப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவன் 200 தடவைகள் தோப்புக்கரணம் செய்யுமாறு நேற்றுமுன்தினம் தண்டனையளித்துள்ளார். அதனால் உள உடல் ரீதியாக மாணவன் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவக வலயத்திலும் இத்தகைய சம்பவம் பின்னர், பொலிஸாரின் தலையீட்டால் இணக்கத்துடன் முடித்துவைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-26)



## பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மன்னாரில்

மன்னார், டிசெ.18
மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அரச ஊழியர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று மன்னார் வாண்மை விருத்தி நிலையத்தில் நடைபெற்றது. சுகாதார அதிகாரிகள், இராணுவத்தினர் விமானப்படையினர் ஒத்துழைப்புடன் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (எ-56)

## மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்கு மறியல்

கொழும்பு, டிசெ.18
இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவன் ஒருவரை, பிளாஸ்டிக் குழாயால் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வெயாங்கொடையில் உள்ள பிரபல பாடசாலையின் ஆசிரியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாலை நேர வகுப்புக்குக் குறித்த மாணவன் வராததால், தொழில்நுட்ப ஆசிரியர், பிளாஸ்டிக் குழாயால் மாணவனின் கை மற்றும் கால்களில் கொடூரமாகத் தாக்கியுள்ளார். இதனால் கை, கால்களில் காயமடைந்த மாணவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் மாணவனது பெற்றோர் வெயாங்கொடை பொலிஸில் முறைப்பாடு செய்தனர். (ம-4,இ)



## அடுத்தவாரம் 5 மாவட்டங்களில் மருத்துவமனைகள் முடங்கும்

கொழும்பு, டிசெ. 18
அடுத்த வாரம் 5 மாவட்டங்களிலுள்ள அரச மருத்துவமனைகளில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் சங்கத்தின் செயலாளரான மருத்துவர் செனல் பெர்னாண்டோ தெரிவிக்கையில்,

பதில் சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகமான விசேட மருத்துவ நிபுணர் விஜேசூரியவை அந்தப் பதவியில் இருந்து நீக்குமாறு சுகாதார அமைச்சிடம்கோரி, இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தை உடனடியாக பதவி நீக்கம் செய்யாவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மன்னார், பொலன்னறுவை, திருகோணமலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் காலவரையற்ற தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும். அதேவேளை மருத்துவர்களின் இடமாற்றம் தொடர்பிலான சிக்கல்களும் நிலவுகின்றன. கிராமப்புறங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு மருத்துவர்களை நியமிப்பதற்கான வேலைவாய்ப்புப் பட்டியல் முக்கியமானது.

மூதூர் ஆதார மருத்துவமனை, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை, மெதிரிகிரிய ஆதார மருத்துவமனை, பொலன்னறுவையில் உள்ள தேசிய சிறுநீரக மருத்துவமனை மற்றும் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனை உள்ளிட்ட கிராமப்புறங்க ளில் உள்ள மருத்துவமனைகளுக்கு நியமனம் பெறவிருந்த மருத்துவர்களை பதில் சுகாதாரப் பணிப்பாளர் இடைநிறுத்தியுள்ளார்- என்றார். (ம-4,இ)

## எரிவாயு சிலிண்டருக்கு மீளக் கடும் தட்டுப்பாடு

நாடளாவிய ரீதியில் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நான்கு நாள்களாக லிட்ரோ நிறுவனம் சந்தைக்கு எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கவில்லை. அதனால் பண்டிகைக் காலமான தற்போது, உணவகங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. கடந்த சனிக்கிழமை கப்பலில் கொண்டுவரப்பட்ட 3 ஆயிரத்து 200 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவை நுகர்வோர் விவகார அதிகார சபை நிராகரித்தது. மாலைத்தீவிலிருந்து வந்த கப்பலிலுள்ள 2 ஆயிரம் மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவும் பரிசோதனை மட்டத்திலேயே உள்ளது. அதனால் எரிவாயுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (எ-இ)



## சமூக குழுக்களுக்கு விசேட செயலமர்வு

மன்னார், டிசெ.18
இலங்கையில் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு, சமூக குழுக்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான விசேட செயலமர்வு மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில், இலங்கை கெல்விட்டாஸ் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில், மாவட்ட ரீதியில் உள்ள மதத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கி செயலமர்வு இடம்பெற்றது.

இந்தச் செயற்றிட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கையில் இன ரீதியான முரண்பாடுகள் அதிகம் காணப்படும் 6 மாவட்டங்கள் உள்வாங்கப்பட்டு, அந்தப் பகுதிகளில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-4,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் ஆண்டாக 2022 அங்கீகாரம்

கொழும்பு,டிசெ.18

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இருநூறாவது ஜனன ஆண்டான 2022 ஆம் ஆண்டை "நாவலர் ஆண்டு" என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் பிரகடனம் செய்வதற்கான தீர்மானத்தை அங்கீகரிக்கும் நிகழ்வு, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது.**



அதற்கான அங்கீகாரக் கடிதம், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரனிடம் கையளிக்கப் பட்டது.

உலகப்புகழ் பெற்ற ஓவியர் மு. பத்மவாசனால் தத்ரூபமாக வரையப் பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இரு திருவுருவப் படைப்புக்கள், பிரதமரால் வெளியி டப்பட்டன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் திருவுருவ வர்ணப் படைப்பு ஒன்று பிரதமரால் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் அக்ஷராத்மானந்த மகராஜ் சுவாமிகள் ஆகியோரிடம் வழங் கப்பட்டது.

மற்றைய படைப்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சி.தனபாலா, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் வே.கந்தசாமி ஆகியோரிடம் வழங்கப்பட்டது. (ம-4-இ)

## கட்டுப்பாடுகள் தளர்த்தல் பொருத்தமற்ற தீர்மானம்

### பொ.சு.ப.சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு,டிசெ.18

நாட்டில் கொரோனாத் தொற்று அதிக ஆபத்தில் உள்ள நிலையில், சுகாதார வழிகாட்டல்களை மேலும் எளிதாக்கும் அரசின் தீர்மானம் பொருத்தமற்றது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவரான உபுல் ரோஹண தெரிவிக்கையில்,

பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் தளர்த்தப்படுதல், பண்டிகைக் காலங்களில் பொது மக்களின் பொறுப்பற்ற நடத்தை உள்ளிட்ட காரணங்களால், கொரோனாத் தொற்றுப் பரவல் விரைவில் தீவிரமடையும். நாட்டில் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ள நிலையில், பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மேலும் எளிதாக்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் அதிக எண்ணிக்கையிலான தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

எனவே தடைகளைத் தளர்த்துவதற்கான தீர்மானம் பொருத்தமற்ற நேரத்தில் எட்டப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய சுகாதார அதிகாரிகள் தற்போதைய தரவுகளைப் பரிசீலித்தார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றார். (ம-4-இ)

## கஞ்சாவுடன் இளைஞர் கைது

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொட்டிலடியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டியில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். முச்சக்கர வண்டியைச் சோதனையிட்ட மதுவரித் திணைக்களத்தினர் 300 கிராம் கஞ்சாவை மீட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் 19 வயதுடையவர் என்றும், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-125)



## யுகதனவி ஒப்பந்தத்திலும் பெரியளவு ஊழல் மோசடி

### ராஜித தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

மிக் விமானக் கொள்வனவில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகளையே, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்திலும் அரசு செய்ய முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மிக் விமானங்கள் கொள்வனவு தொடர்பில் உக்ரைனுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. எனினும் உக்ரைனுடன் செய்து கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்தமானது பிரிட்டனில் உள்ள வேறொரு நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்டது. இதனை வெளிப்படுத்தியமைக்காகவே ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க சுட்டுக்கொல்லப்பட்டார். மிக் விமான ஊழலைப் போன்றே யுகதனவியில் நடக்கப்போகின்றது. யுகதனவி தொடர்பில் போட்டர்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டுமாக இருந்தால், ஏன் மற்றொரு மூன்றாந்தரப்பு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள்? என்றும் அவர் தெரிவித்தார். (ம-4-இ)




கச்சேரிக்குள்ள ஒரு ஒப்பீஸர் இருக்கிறார். அவர் மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டுற விலாங்கு மீன் மாதிரி. தனக்கு வசதி எண்டால் கனவு பாழாப்போன எம்.பிக்கு வால் பிடிப்பார், அதேமாதிரி அந்த எம்.பியின்ர சில விசயங்களை போட்டுக்குடுக்கவும் செய்வார். எப்ப எந்தப் பக்கம் நிப்பார்? என்ன செய்வார் எண்டு ஆருக்கும் தெரியாது. அப்பிடிப்பட்டவர் கச்சேரிக்குப் பொறுப்பான பெரியவருக்கும் நிறைய ஆப்பு வைச்சிருக்கிறார். பெரியவரும் எவ்வளவு நாள்தான் பொறுமையா இருக்கிறது? அதால ஆளைக் கொஞ்சம் காத்துக்குறைச்சு வைச்சிருக்கிறார். ஆனாலும் அந்த ஒப்பீஸர் அடங்கிற மாதிரி இல்லை.

இந்த விலாங்கு மீன் ஒப்பீஸர் செய்ய வேண்டிய வேலைகளை , தனக்கு நம்பிக்கையான வேற ஆக்கள் மூலம்தான் கச்சேரிப் பெரியவர் செய்யத் துடங்கியிருக்கிறார். ஏனெண்டால் விலாங்கு மீனிட்ட பைல் போனால், உடனேயே அது அரசியல்வாதிகளுக்கு போட்டோவா போயிடும். கனவு பாழாப்போனவருக்கு ஆதரவான விசயமெண்டால் தியேட்டருக்கும், தியேட்டர்காரருக்கு ஆதரவான விசயமெண்டால் கனவு பாழாப்போன வருக்கும் அதுகளை படமெடுத்து அனுப்பி, அதை ஒரு பிரச்சினையாக்கி பார்த்து ரசிக்கிறது விலாங்குமீன் ஒப்பீஸருக்கு பிடிச்ச பொழுது போக்காம். அதாலதான் இவருக்கே தெரியாமல் எல்லா வேலையும் முடிச்சுப் போட்டு, சைன் போட மட்டும் இவரிட்ட கடைசி நேரத்தில பைலை அனுப்பிற உத்தியை கச்சேரிப் பெரியவர் கையில எடுத்திருக்கிறாராம்.

அப்பிடி ஒரு வேலையை பெண் அதிகாரி ஒருத்தரிட்ட செய்யச் சொல்லிக் கச்சேரிப் பெரியதலை சொல்லியிருக்கிறார். அந்தப் பெண் அதிகாரியும் அந்த வேலையை சொன்னபடி செய்து முடிச்சிருக்கிறா. இப்ப விலாங்குமீன் ஒப்பீஸரிட்டையும் அதில கையெழுத்து வாங்கவேணும். வழக்கம் போல சைன் வாங்கிறதுக்கு அவரிட்ட அந்த பைலோட அந்தப் பெண் உத்தியோகத்தர் போயிருக்கிறா. தனக்குக் கீழ்நிலையில உள்ள ஒரு உத்தியோகத்தர், தான் சம்பந்தப்பட்ட வேலையை தனக்கே தெரியாமல் செய்துபோட்டு, சைன் வாங்க மட்டும் வந்துநிக்கிறா எண்டு விலாங்குமீன் ஒப்பீஸருக்கு கோபம் வந்திட்டுது.

ஏன் சைனையும் நீங்களே வைச்சிருக்கலாமே? அதுக்கு மட்டும் ஏன் என்னட்ட வாறிங்கள்? எல்லாம் நான் குடுத்த இடம். சைனுமில்லை, ஒண்டுமில்லை. எனக்குத் தெரியாமல் பைல் செய்தமாதிரி, சைனையும் போய் வேற ஆக்களிட்ட வாங்கும் எண்டு கத்திக் கொண்டே, அந்த பைலை பெண் உத்தியோகத்தரின் முகத்துக்கு எறிஞ்சிருக்கிறார். அந்தப் பெண் உத்தியோகத்தருக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேலை. "பெரியதலைக்கும், விலாங்குமீனுக்கும் இடையில உள்ள பிரச்சினைக்கு என்னை ஏன் பழிவாங்கவேணும்?" எண்ட கவலையில அங்க இருந்து வந்திட்டா. எண்டாலும் மேல்மட்டங்களில முறையிட்டு, இதுக்கு நீதி கேக்க நினைச்சிருக்கிறா. ஆனாலும் "இதைப் பெரிய பிரச்சினை ஆக்க வேண்டாம். நான் பாக்கிறன்" எண்டு பெரிய தலை அவாவுக்கு அட்வைஸ் சொன்னதால விலாங்குமீன் தப்பிட்டாராம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தில்

# இவ்வருடம் விபத்தால் 42 பேர் பரிதாபச் சாவு




**கிளிநொச்சி, டிசெ. 18**

**கிளிநொச்சி மாவட்டத்தில் விபத்தால் இந்த வருடத்தில் 42 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பொலிஸார் இதனைத் தெரிவித்தனர்.**

வீதியில் பயணித்துக் கொண்டிருப்பவர்கள் சடுதியாகத் திரும்புதல் மற்றும் வீதி நடைமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்காமையால் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக வீதியைக் கடக்கும்போது கடுமையான அவதானம் செலுத்த வேண்டும். கிளிநொச்சி நகரில் விபத்துக்கள் குறைவு. எனினும் நகருக்கு அப்பால் கரடிபோக்குத் தொடக்கம் பளை வரையான பகுதியிலும், 155ஆம் கட்டை தொடக்கம் இரணைமடுச் சந்தி வரையிலும் விபத்துக்கள் அதிகம் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் சுட்டிக் காட்டினர். அதேவேளை இலங்கை முழுவதும் 70 கிலோ மீற்றர் வேகத்துக்குட்பட்டதாகவே வீதிகள் காணப்படுகின்றன. அதனை மீறி பயணிப்பதாலேயே அதிக விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர்.

பேருந்துச் சாரதிகள் அதிக வேகத்தில் பயணித்தவாறு வெற்றிலையைப் பயன்படுத்துவதுடன், தொலைபேசி உரையாடல்களிலும் ஈடுபடுகின்றனர். பயணிகள் பாதுகாப்புத் தொடர்பில் கவனத்தில் கொள்வதில்லை என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இதற்கு ஒரே தீர்வாக வீதிப் போக்குவரத்தில் வேகக் கட்டுப்பாட்டை விதிப்பதே பொருத்தமானது என்று தீர்மானிக்கப்பட்டது. (ம-4.113)



## புனரமைப்பின்றி விசுவமடு சந்தை

முல்லைத்தீவு, டிசெ.18

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான விசுவமடு சந்தையின் நுழைவாயில் மற்றும் உள்ளகப் பகுதிகள் சேதமடைந்துள்ளதால், பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

சேறும் சகதியுமாக சந்தை காணப்படுவதால், சந்தையின் உட்பகுதிக்குச் செல்ல மக்கள் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் சந்தை வியாபாரிகளின் அன்றாட வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4.113)

## 2 மில்லியன் பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி

கொழும்பு, டிசெ. 18

இலங்கையில் இரண்டு மில்லியனுக்கும் அதிக மானவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 888 பேருக்கு பூஸ்டர் டோஸ் செலுத்தப்பட்டது. அதற்கமைவாக பூஸ்டர் டோஸை இதுவரை பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 20 லட்சத்து 58 ஆயிரத்து 791 ஆக அதிகரித்துள்ளது என்றும் தொற்றுநோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-4.இ)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிசெ.18

மக்கள் கலை இலக்கிய சமூக செயற்பாட்டாளர் வ. சிவஜோதியின் முதலாம் ஆண்டு நினைவரங்கும் 'என் எண்ண ஓட்டத்தில்' எனும் நூல் அறிமுக விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சுழிபுரம் கே.ஏ.சுப்பிரமணியம் நூலகத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் சட்டத்தரணியும் பதில் நீதிவானுமாகிய சோ.தேவராஜா, கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் ந.காண்டீபன், தேசிய கலை இலக்கிய பேரவைத் தலைவர் க.தணிகாசலம் உள்ளிட்ட பல கல்வியியலாளர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-125)

## பண்டிகைக் காலத்தில் விசேட சோதனைகள்

கொழும்பு, டிசெ. 18

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

அதனடிப்படையில் மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

எனவே அனைத்து சாரதிகளும் போக்குவரத்து விதிகளை மீறாது செயற்பட வேண்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ம-4.இ)

## இறக்குமதிப்பொருள்களின் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 18

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளது என்று தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் 140 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் இந்த வாரம் 250 தொடக்கம் 260 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ செத்தல் மிளகாயின் மொத்த விற்பனை விலை 800 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதேபோன்று 140 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை 160 ரூபாவாக அதிகரித்துள்ளது என்றும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4.இ)

## மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 18

கொழும்புக்கு அப்பாலுள்ள பொருளாதார மையங்களில், கறிமிளகாய் மற்றும் பச்சை மிளகாய் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளின் விலை ஓரளவு வீழ்ச்சியை அடைந்துள்ளது.

தம்புள்ளை பொருளாதார மையத்தில் கறிமிளகாய் ஒரு கிலோ கிராம் 550 ரூபாவுக்கும், பச்சை மிளகாய் ஒரு கிலோகிராம் 800 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. (ம-4.இ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

முல்லைத்தீவு, டிசெ. 18

உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி அருளாசியுரையும், வேதபாராயணமும் நாளை ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோயிலில் காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இதன்போது ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ வேதாகம கிரியாஜோதி ஜெ.செந்தில்நாதக்குருக்கள் அருளாசி உரையையும், வேதபாராயணத்தையும் நிகழ்த்தவுள்ளார். (ச)

## கருத்தாய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 18

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் 'சிதைந்து போகின்ற தமிழ் தேசியமும் சிந்திக்காத தலைமைகளும்' என்ற தலைப்பில் கருத்தாய்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கருத்தாய்வில் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம், நிலாந்தன், ம.செல்வின், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-27)

## பயனாளிகளுக்கு 50,000 தென்னைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 18

தென்னை அபிவிருத்திச் சபை யாழ். மாவட்டத்தில், இந்த ஆண்டில் இதுவரைக்கும் 50 ஆயிரம் வரையிலான தென்னங்கன்றுகளை பயனாளிகளுக்கு வழங்கி வைத்துள்ளது.

இந்த தென்னங்கன்றுகள் யாவும் மானிய விலையில், பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டதாக தென்னை அபிவிருத்திச் சபை தெரிவித்தது. தென்னைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு அடுத்த 2022ஆம் ஆண்டிலும் கூடுதலான தென்னங்கன்றுகளைப் பெற்று பயனாளிகளுக்கு வழங்கி வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்னங்கன்றுகளைப் பயனாளிகள் உரியமுறையில் பயிரிட்டுப் பாதுகாப்பதற்கு அதற்கான விளக்கங்கள் மற்றும் ஆலோசனைகளை தென்னை அபிவிருத்திச் சபை வழங்கி வருகின்றது. (ரி1,17)

## விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி, டிசெ.18

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதியதில் அவற்றில் பயணித்த மூவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரியில் இடம்பெற்றது.

மழை பெய்துகொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் குடையுடன் பயணித்த ஒருவர் எதிரேவந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. காயமடைந்த மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடக்கில் சுற்றும் சுறாக்கள்

சீனத் தூதுவரின் இலங்கைக்கான பயணம் ஆசிய வட்டகையில் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. குறிப்பாக பருத்தித்துறைத் துறைமுகம் மற்றும் எண்ணெய் வளம் மிக்கதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மன்னார் பகுதிகளுக்கு அவர் மேற்கொண்ட பயணம் பல கேள்விகளைத் தோற்றுவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு சீனாவின் சார்பாக அன்பளிப்புப் பொருள்களை வழங்குவதற்காக மட்டும்தான் தூதுவர் வடமாகாணத்துக்குள் அடியெடுத்து வைத்தாரா? என்று கேட்டால், பூகோள அரசியலில் அரிச்சுவடி தெரிந்த சகலரின் பதிலும் 'இல்லை ' என்பதாகத்தான் அமையும். சீனா தன்னை ஒரு கம்யூனிச நாடாகக் காட்டிக்கொண்டாலும் அதன் செயற்பாடுகள் யாவும் முதலாளித்துவச் சித்தாந்தம் கொண்டவையாகத்தான் இருந்து வந்திருக்கின்றன. சீனா தற்போது உலகின் பலநாடுகளை போர் செய்யாமலே, கத்தியின்றி, ரத்தமின்றி வெறும் பொருளாதாரப் பொறிக்குள் வீழ்த்தி தன் சொல்லைக் கேட்கும் தலையாட்டிப் பொம்மைகளாக மாற்றி இருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில் மன்னார், யாழ்ப்பாணம் மீனவர்களுக்கு சீனா வழங்கிய உதவிகூட பெரும் பின்னணியைக் கொண்டது என எண்ணுவதில் தவறில்லை. 'இறால்போட்டு சுறா பிடிக்கும்' கைங்கரியம் இது.

இலங்கையொன்றும் வறண்ட பாலைவனப் பூமியல்ல. அள்ள அள்ளக் குறையாத இயற்கை வளங்கள் இலங்கையெங்கும் கொட்டிக் கிடக்கின்றன. இன்னும் தெளிவாகச் சொல்வதானால் சர்வதேச வர்த்தக நிறுவனங்களினதும், சீனா, அமெரிக்கா போன்ற வல்லரசுப் பருந்துகளினதும் பார்வையில் இலங்கை ஆகச் சிறந்த பொருளாதார இரை. கூடவே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடப் பெறுமதியும் இலங்கைக்கு உண்டு. இதனால்தான் இந்தியா, சீனா, அமெரிக்கா என வல்லரசுச் சுறாக்கள் மாறி மாறி இலங்கையை மொய்த்துக் கொண்டிருக்கின்றன. இந்த இரையை இன்னொரு பலசாலியிடம் விட்டுவிடாமல் தமதாக்கிவிடவேண்டும் என்பதில் அவை அலாதி முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

கடந்த சில வாரங்களின் முன்னர் இந்தியாவின் முக்கிய வர்த்தகப் புள்ளியான அதானி, மன்னாருக்கு வந்து சென்றிருந்தார் என்பது பலருக்கும் நினைவிருக்கலாம் மில்லியன் டொலரில் அனுதினமும் வணிகத்தை மேற்கொள்ளும் பெரும் பணக்காரர் அவர். அத்தகையதொருவர் தன்னுடைய நேரத்தை விரயமாக்கி, மன்னாருக்கு சுற்றுலா வந்திருக்க முடியாதே? மன்னாரில் எண்ணெய் வளம் உள்ளது என்று கண்டறியப்பட்டதையும் அதானி வந்ததையும் இப்போது சீனத் தூதுவர் அங்கு சென்றதையும் தயங்காமல் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்க்கலாம். ஒருபொருளை இலாபத்தோடு விற்கவேண்டுமானால், அதன் கேள்வியை அதிகரிக்க வேண்டும். அதனால்தான் இந்தியாவுக்குப் போட்டியாக சீனாவையும் வடக்கில் கால்பதிக்க அனுமதித்து, அந்தப் போட்டியில் தன்னிடமுள்ள வளங்களை விற்று, காசுபார்க்க இலங்கை அரசாங்கம் நினைக்கின்றது. ஒரு வளம் கிடைத்துவிட்டால் அதை எப்படி விற்றுக் காசாக்கலாம் என்பதைத்தான் இலங்கை அரசு தரப்பு சிந்திக்கின்றதே தவிர அந்த வளத்தை நிலைபேறானதாக மாற்றி, நீண்டகால அடிப்படையில் இலங்கை முழுப்பயனையும் அடையும் வழிவகைகளை எமது 'ஆசிய அதிசயங்கள்' கண்டறிவதற்கு வாய்ப்பேயில்லைப் போலும். எமக்குரிய வளங்களை மிகக் குறுகிய காலத் தேவைகருதியோ அல்லது எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டுவதைப் போன்று தரகுப் பணத்துக்காகவோ இதர தரப்புக்கு விற்றுவிட்டு, கடனை அடைப்போம், பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவோம் என்று வாய்ச் சவடால் காட்டுவதுதான் ஆட்சியிலுள்ளவர்களின் ஒரேயொரு பொருளாதார வியூகமாக உள்ளது.

வளம் இல்லாமலோ அல்லது வளப் பற்றாக்குறையாலோ இலங்கை பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கவில்லை. இங்கிருக்கும் பெரும் பிரச்சினை 'பயன்படுத்தத் தெரியாமை'. ஒன்றுமட்டும் உண்மை, வடக்கு மாகாணத்தின் [illegible] வளங்களும் அந்நிய தேசங்களுக்கு அடமானம் [illegible]படும் நாள் வெகுதொலைவில் இல்லை.




# கிராமத்தைப் பாதுகாக்க மணல் அகழ்வை நிறுத்துக!

## இலுப்பைக்கடவை விவசாய அமைப்பு வடமாகாண ஆளுநருக்குக் கடிதம்

**மன்னார், டிசெ. 18**



**மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தி எமது கிராமத்தைப் பாதுகாத்துத் தர வேண்டும் என்று வடமாகாண ஆளுநரை வலியுறுத்தியுள்ளது இலுப்பைக் கடவை விவசாய அமைப்பு.**

இது தொடர்பில் அந்த அமைப்பு ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

மாந்தை மேற்கு ஆத்திமோட்டைப் பகுதியில் நீண்டகாலமாக வசித்து வரும் நாங்கள் பூர்வீக தொழிலாக விவசாயத்தைச் செய்து வருகின்றோம். தற்சமயம் எமது கிராமத்தைச் சேராதவர்கள் எமது கிராமத்தவர்களின் காணிகளை விலைக்கு வாங்கி அல்லது குத்தகை அடிப்படையில் எடுத்து அருகில் உள்ள அரச கைகளையும் சேர்த்து மிகப்பெரிய அளவில் மணல் அகழ்வினை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் நன்னீர் மீன் வளர்ப்பு, உவர்நீர் மீன் வளர்ப்பு மற்றும் மண் மாற்றுதல் என போலியான ஆதாரங்களைக் காட்டி அனுமதிகளை பெற்றுள்ளனர்.

எனவே வடக்கு மாகாண ஆளுநராகிய தாங்கள் இதில் நேரடியாகத் தலையிட்டு உரிய விசாரணைகளை செய்து மணல் மாபியாக்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை இரத்துச்செய்து எமது கிராமத்தையும் எமது விவசாயத் தொழிலையும் பாதுகாப்பதற்கு நவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் கள்ளியடி கிராமத்திலிருந்து ஆத்திமோட்டை கிராமத்துக்குச் செல்வதற்கான மூன்று கிலோமீற்றர் வீதி பிரதேச சபைக்குச் சொந்தமானது ஆகும். ஆனால் மனிதர்கள் நடந்து போக முடியாத அளவு கனரக வாகனங்களைச் செலுத்தி வீதியைச் சிதைவடையச் செய்கின்றனர். எனவே இவ்வாறான சமூக விரோதச் செயல்களை நீங்கள் கட்டுப்படுத்தித் தரவேண்டும் என்றுள்ளது. (ம-213)

# எரிவாயு தட்டுப்பாட்டால் உணவகங்களுக்கு பூட்டு

கொழும்பு, டிசெ. 18

நாட்டில் எரிவாயு தட்டுப்பாட்டால் 80 வீதத்துக்கும் அதிகமான சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவகங்கள் மூடப்படும் அபாயத்தில் உள்ளன என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மரக்கறி விலை அதிகரிப்புக்கு மேலதிகமாக சந்தையில் எரிவாயுத் தட்டுப்பாடு பிரதான பிரச்சினையாக மாறியுள்ளது. சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தங்கள் சேவைகளைத் தொடர முடியாத நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர். எரிவாயுத் தட்டுப்பாடு மற்றும் மரக்கறிகளின் விலை அதிகரிப்பால் மரக்கறி அடங்கிய மதிய உணவின் விலை 180 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

நாளை 19.12.2021 ஞாயிற்றுக்கிழமை மார்கழி 04

சுபநேரம் : காலை 09.23 - மு.ப.10.53
ராகுகாலம்: காலை 04.53 - பி.ப.06.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இருநூறாவது அகவை ஆண்டினை நாவலர் ஆண்டாகப் பிரகடனஞ் செய்து முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டங்கள்



## எமது செயற்றிட்டங்கள்

- தேசிய வீரருக்கான முத்திரை வெளியீடு.
- நாவலர் பெருமானின் பெருமை கூறும் ஆவணப்படம்.
- நாவலர் பெருமானின் வரலாற்றுச் சாதனைகளைக் காட்சிப்படுத்தல்.
- நாவலர் பெருமானுக்கு நினைவுச் சின்னங்கள் தாபித்தல்.
- நாவலர் பெயரில் வீதிகள் அமைத்தல்.
- நாவலர் கலாசார மண்டபச் செயற்பாடுகளை விஸ்தரித்தல்.
- நாவலர் நமக்காகத் தந்த நூல்களை மீள் பதிப்புச் செய்தல்.
- நாவலர் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் மகாநாடுகள்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நெறியின் செயற்பாடுகளை விஸ்தரித்தல்.
- நாவலர் பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி.
- முன் மாதிரி அறநெறிப் பாடசாலை அமைத்தல்.
- அறநெறிப் பாடசாலை மாணவர்களைச் சைவ சமயிகளாக வாழச் செய்தல்.
- மாணவர்களுக்கான போட்டிகள்.
- ஆலயங்களைச் சமுதாய மையங்கள் ஆக்கும் வகையிற் செயற்படுதல்.
- நாவலர் ஞாபகார்த்த விருது வழங்கல்.
- அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குதல்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் - சைவமும் தமிழும் தன்னிரு கண்களாய்ப் போற்றிய பெருமகன் - நல்லொழுக்கத்திற்கும் ஆன்மிக ஈடேற்றத்திற்கும் வழி வகுப்பதே கல்வி என்பதைச் சமூகத்திற்கு உணரவைத்த காருண்யன் - சைவத் தமிழ் உலகம் முன்னுதாரணமாகக் கொள்ளவெனப் பாதை வகுத்த கலங்கரைவிளக்கு - எங்களுக்காகவும் எங்கள் மதத்திற்காகவும் தன்னை உருக்கிய பெருமகன் - சைவத் தமிழ் மக்களின் கலங்கரை விளக்கு - எண்ணம், சொல், செயல் மூன்றும் சைவத்தமிழ் உலகம் சிறப்பதற்காய் அர்ப்பணித்த பெருந்தகை - எமது சமூகம் மீண்டெழப் பற்றுக் கோடாய்க் கொள்ளும் வழிகாட்டிச் சென்ற தன்னிகரில்லாத் தலைவன் - சைவத்தையும் தமிழையும் உய்விக்க வந்த அவதார புருஷர்.

தமிழ் வரலாற்றிலுஞ் சைவ சமய வரலாற்றிலும் ஆறுமுகநாவலருக்குத் தனியிடம் உண்டு. வரலாற்றில் அவர் சொல்லும் செயலும் எண்ணங்களும் எப்போதும் நிலைபெற்றிருக்கும். நாவலர் பெருமான் ஒரு சரித்திர புருஷர். சரித்திரம் உருவாக்கிய மகோன்னத புருஷர். அவர், ஒரு தனி மனிதப் புரட்சி வரலாற்றின் கதாநாயகன். தன் வாழ்நாளை ஒரு இனத்திற்காய் அர்ப்பணித்த செயல் வீரர். இத்தகைய பெருமைக்குரிய தலைமகனை நாம் என்றும் போற்றுவது நம் தலையாய கடமை.

சைவத் தமிழ் உலகால் என்றென்றும் வணங்குதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய, சைவத் தமிழர்களின் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இம் மண்ணிற் பிறந்த 200 ஆவது ஆண்டினை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் ஆண்டினைச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

அந்த வகையிலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டங்களாவன.

- **தேசிய வீரருக்கான முத்திரை வெளியீடு**
  நம் தேசத்தின் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு வழிகாட்டிய தேசிய வீரர் நாவலர் பெருமானுக்கு நினைவு முத்திரை வெளியீடு செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்தல்.
- **நாவலர் பெருமானின் பெருமை கூறும் ஆவணப்படம்**
  நாவலர் பெருமானின் வரலாற்றினையும் அவர்தம் சாதனைமிகு செயற்பாடுகளையும் சித்திரிக்கின்றவகையிலும் வளரும் இளம் சந்ததியினர் நாவலர் பெருமானைப் பற்றி அறியத்தக்க வகையிலும் ஆவணப்படம் வெளியிடல்.
- **நாவலர் பெருமானின் வரலாற்றுச் சாதனைகளைக் காட்சிப்படுத்தல்**
  நாவலர் பெருமான் நமக்காகச் செய்த சீர்மிகு பணியை, உயிரோட்டமான ஓவியங்களாக்கி அந்தப் பெருமகனின் வரலாற்றுக் காட்சிகளை, நாவலர் பெருமான் பிறந்த இடத்திலே அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்திலே காட்சிப்படுத்தல்.
- **நாவலர் பெருமானுக்கு நினைவுச்சின்னங்கள் தாபித்தல்**
  சைவ மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் சைவப் பாடசாலைகளிலும் புனிதம் பேணத்தக்க வகையிலே, நாவலர் பெருமானுக்கு நினைவுச் சின்னங்கள் தாபித்து அவற்றைப் பேணிப் பராமரித்தல்.
- **நாவலர் பெயரில் வீதிகள் அமைத்தல்**
  சைவ மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் சைவத் தமிழ் உலகிற்கு முகவரி தந்த நாவலர் பெருமானின் திருப்பெயரில் வீதிகளுக்குப் பெயரிடும் பணிக்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆக்கமும் ஊக்கமும் நல்குதல்.
- **நாவலர் கலாசார மண்டபச் செயற்பாடுகளை விஸ்தரித்தல்.**
  நாவலர்பெருமான் பிறந்த இடத்திலே அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தை நவீன வசதிகளோடு கூடிய நாவலர் பெருமான் நினைவிடமாக மாற்றுதல் - நாவலர் பெருமானுக்கு நாள்தோறும் வழிபாடு நடைபெறும் வகையிலே தனியான பகுதி அமைத்தல் முதலான அம்சங்களோடு, நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலருடைய நோக்கம் நிறைவேறும் வகையிற் செயற்பாடுகளை முன்னெடுத்து, நாவலர் பற்றிய முழுமையை நாவலர் கலாசார மண்டபத்திற் காணத்தக்க வகையிற் செயற்பாடுகளை முன்னெடுத்தல். அத்துடன் இம்மண்டபம் தொடர்பான செயற்பாட்டில் யாழ்.மாநகர சபையோடு இணைந்து செயலாற்றுதல்.
- **நாவலர் நமக்காகத் தந்த நூல்களை மீள் பதிப்புச் செய்தல்**
  நாவலர் பெருமானால் ஆக்கப்பட்ட, பதிப்பிக்கப்பட்ட, உரை வகுக்கப்பட்ட, பரிசோதிக்கப்பட்ட இன்னோரன்ன நூல்களை மீள்பதிப்புச் செய்தலும் அவற்றைப் பயனுறச் செயலாற்றுதலும்.
- **நாவலர் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் மகாநாடுகள்.**
  சைவ சமய மறுமலர்ச்சி, மொழிப் பயன்பாட்டிற் புதுமை செய்த நாவலர் பெருமானின் செயல்களுக்கு மேலும் ஊக்கம் நல்கும் வகையில் மகாநாடுகளை முன்னெடுத்து, நாவலர் காட்டிய தமிழ், சமய விழுமியங்கள் தொடர்பிலான இடைவெளிப் பகுப்பாய்வு நிலைகள் பற்றியும் அவற்றுக்கான தீர்வுகள் பற்றியதாயும் அமையும் வகையிலே மகாநாடுகளை முன்னெடுத்தல்.
- **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நெறியின் செயற்பாடுகளை விஸ்தரித்தல்**
  நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற செயற்பாட்டின் ஓர் அங்கமாக இந்து சமயக் கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையில் ஆன்மிகப் பிரசாரகர் பயிற்சி நெறி, அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள், சைவாகமக் கற்கைகள் முதலானவற்றை மேம்படுத்தல்.
- **நாவலர் பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி**
  நாவலர் பெருமானால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளுக்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தன்னாலான பங்களிப்பினை நல்குதல்.
- **முன் மாதிரி அறநெறிப் பாடசாலை அமைத்தல்.**
  அறநெறிக் கல்வியின் பிதாமகர் நாவலர் பெருமான் என்ற பெருமையோடு நாவலரின் எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையிலே நாவலர் கலாசார மண்டபத்திலே முன்மாதிரியான அறநெறிப் பாடசாலைச் செயற்பாட்டினை முன்னெடுத்தல்.
- **அறநெறிப் பாடசாலை மாணவர்களைச் சைவ சமயிகளாக வாழச் செய்தல்**
  மாணவர்களை ஒழுக்க விழுமியப் பண்புள்ளவர்களாக வாழ வழிகாட்டுதல் மற்றும் சைவ மாணவர்கள் தீட்சை பெறுவதனை முக்கியத்துவப்படுத்தல்.
- **மாணவர்களுக்கான போட்டிகள்**
  பாடசாலை மாணவர்களிடத்தில் சமயப் போட்டிகளை நடத்துவதன் ஊடாக, சைவ சமய அறிவினை வளர்த்தல். பாடசாலைகளுக்கிடையே நாவலரினைச் சிறப்பிக்குமாறு விவாதப் போட்டிகள் நடத்தி, பிரதமர் கேடயம் வழங்குதல்.
  புதிர்ப் போட்டி - நாவலரின் வாழ்க்கை வரலாற்றினையும் நாவலர் பெருமான் தந்த நூல்களையும் உள்ளடக்கியதாக, (சைவ வினா விடை, பாலபாடம், ஆத்திசூடி முதலிய நீதி நூல்கள்) பாடசாலை மாணர் குழு நேரடியாகப் பங்குபற்றும் நிகழ்வு. நாவலர் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய சைவ சமயப் பொது அறிவு வினா விடைப் போட்டி போன்ற மாணவர்களின் ஆக்கத்திறன் ஆளுமைகளை வெளிக்கொணரத் தக்க வகையில் போட்டி நிகழ்வுகளை முன்னெடுத்தல்.
- **ஆலயங்களைச் சமுதாய மையங்கள் ஆக்கும் வகையிற் செயற்படுதல்**
  நாவலர் பெருமானின் எண்ணங்களில் மகத்துவமான ஆலயங்களை ஆன்மிக நெறி பிறழாத வகையிலே சமுதாய மையங்களாக ஆக்கும் செயற்றிட்டத்திற்கு அமைவாக இந்து ஆலயங்களுக்கான ஒன்றிணைந்த நிர்வாக அலகினை உருவாக்கி சமுதாய மேம்பாடு நோக்கிய செயற்பாட்டை வலுப்பெற வைத்தல்.
- **நாவலர் ஞாபகார்த்த விருது வழங்கல்**
  நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையிலே ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக அமைகின்ற ஆலய நிர்வாகங்கள், சமய நிறுவனங்கள், சமூக சேவையாளர்களுக்கு நாவலர் விருது வழங்கிக் கௌரவிக்கும் ஊக்கப்படுத்தற் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- **அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்குதல்**
  விசேட ஆளுமைத் திறன்களை வெளிக்காட்டுகின்ற மாணவர்களுக்கு நிதிமூலம் ஒரு தடையாக இருக்காமல் அவர்களுக்கு இந்துப் பண்பாட்டு நிதியம் மூலமாகப் புலமைப்பரிசில் வழங்குகின்ற செயற்றிட்டத்தினை முன்னெடுத்தல்.
  இச் செயற்பாடுகளில் நாவலர் சபை, இந்து மாமன்றம், சைவபரிபாலன சபை, விவேகானந்த சபை போன்ற சைவ சமயம் சார்ந்த நிறுவனங்கள் ஆலயங்கள் அறநெறிப் பாடசாலைச் சமூகத்தின் ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புகளுடன் செயற்பாடுகளை முன்னெடுக்க இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தயாராகவுள்ளது. மேலும் அரச நிறுவனங்கள் என்ற வகையிலே அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றின் ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புகளுடன் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தயாராகவுள்ளது.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(CR 36751)





## சமய சகவாழ்வு தேசமெங்கும் மலரட்டும் !

இலங்கைத் திருநாட்டிலே, சமய சகவாழ்வு நோக்கிய பயணம் என்பது மீண்டும் புத்துயிர்ப்புப் பெற்றுள்ளமை மகிழ்வுதரக்கூடிய ஒரு விடயம். நாட்டில் உள்ள சகல மதத்தவரும் தங்களின் மத அனுட்டானங்களைப் பின்பற்றுவதற்கான சுதந்திரமும் அதற்கான அங்கீகாரங்களும் பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்களின் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது.

சைவத்தமிழ் மக்களின் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் அவதாரம் நிகழ்ந்து, எதிர்வரும் ஆண்டு இருநூறாவது ஆண்டாக அமையவுள்ளது. அதனை முன்னிட்டு, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் ஆண்டினை நாவலர் பெருமான் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது.

இதற்கான முழுமையானதொரு அரச அங்கீகாரத்தினை இந்த நாட்டின் அரச தலைவர் வழங்கியமையை அகமகிழ்ந்து பாராட்டுகிறேன். நாவலர் பெருமானுக்காக முன்னெடுக்கப்படவுள்ள நிகழ்வுகள் சிறப்புற நிகழ்ந்தேற இறை ஆசி வேண்டி, வாழ்த்தி மகிழ்கின்றேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
*குரு முதல்வர்,*
*இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*



## மீண்டும் ஒரு மறுமலர்ச்சிக்கு வித்திடுவோம்!

இலங்கைத் திருநாட்டின் பிரதமர் அவர்களின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் ஆண்டினை நாவலர் பிறந்து இருநூறாவது ஆண்டு என்ற வகையிலே நாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, பல்வேறு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

இத்தகு செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் அளித்து, சமய சக வாழ்வினை இந்த நாட்டிலே ஸ்திரப்படுத்தப் பாடுபடும் பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்களையும் இத்தகைய நல்ல செயற்பாடுகளைத் திறம்பட முன்னெடுக்கின்ற இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்தையும் பாராட்டி மகிழ்வதோடு இந்த வேளையிலே நன்றியையும் கூறிக்கொள்கின்றேன்.

எமது மண்ணிலே சமய மறுமலர்ச்சியைத் தந்த நாவலர் பெருமானுக்கு நாவலர் ஆண்டிலே நாம் முன்னெடுக்கப் போகும்செயற்பாடுகள் மீண்டும் இந்த மண்ணிலே மறுமலர்ச்சிக்கு வித்திடவேண்டும். நாட்டின் எதிர்காலம் சுபீட்சம் மிக்கதொரு வாழ்வாக மலர வேண்டும். சமய சகவாழ்வுக்கு நாவலரின் எண்ணங்கள் வலுச்சேர்க்க வேண்டும். இவை எம்மண்ணில் நிகழ்ந்தேற நாவலர் ஆண்டு நல்லதோர் வழி சமைக்கட்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா**
*பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர்*



## நாவலரின் எண்ணங்கள் ஈடேற நல்லதோர் ஆரம்பமாக அமையட்டும்!

கௌரவ பிரதமர் அவர்கள் இந்த நாட்டின் சமய விவகாரங்களுக்கான தலைவர் என்ற வகையிலே வழங்கியுள்ள அங்கீகாரமும் அதற்கு ஏற்றாற் போல இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 'நாவலர் ஆண்டு' என்கின்ற பிரகடனமும் காலத்தின் தேவையறிந்த செயல் என்ற வகையிற் பாராட்டுகின்றேன். இது நாவலரின் எண்ணங்கள் ஈடேறுவதற்கான நல்லதோர் ஆரம்பமாக அமையட்டும்.

சைவ சமயத்தின் சாராம்சத்தை - அதன் தன்மையை - சைவம் நமக்குச் சொல்லும் வழி என்ன என்பது பற்றி நம்மவர்க்கு உணர்த்தி - சைவ சமயத்திற்கும் நம் தமிழ் மொழிக்கும் மீட்டுருவும் புதிய வடிவமும் கொடுத்த பெருமகனின் எண்ணங்களும் கனவுகளும் முழுமை பெற முன் அவரது இவ்வுலக வாழ்வு நின்றுபோனது.

உண்மையில் எங்களுடைய சமூகம் மீண்டௌ நாவலரைப் பற்றுக்கோடாய்க் கொள்ளவேண்டும். கடந்த காலத்து மனோபாவங்களிலிருந்து எம்மை நாமே முற்றாக மீட்டுக்கொண்டு அறிவு பூர்வமாகச் செயற்பட வேண்டும். கல்வியின் பயனாகிய சிந்தனை வழியாக நாம் வாழப் பழகவேண்டும். நாவலருடைய எண்ணங்கள் ஈடேற வேண்டும் என்றால் அவருடைய எண்ணங்கள் மற்றுஞ் சேவைகளுக்குச் செயலூக்கந் தரவேண்டும். அது பிரகடனப்படுத்தப்பட்ட நாவலர் ஆண்டிலே நாவலருடைய எண்ணங்களாக ஈடேற வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**பேராசிரியர் சி. பத்மநாதன்**
*வேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்*



ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය
*இலங்கையின் பிரதம அமைச்சர்*
**Prime Minister of Sri Lanka**

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது 200ஆவது பிறந்த நூற்றாண்டு நிகழ்வுகளிற்கான பிரதமரின் அங்கீகாரம்

சமூகத்தில் உள்ளவர்கள் ஆன்மிகத் துறையிலும் நற்பண்பிலும் மேம்பட வேண்டுமாயின், அதற்கு அவர்கள் தமது மத அனுட்டானங்களைச் சரிவரப் பின்பற்றுபவர்களாக இருக்கவேண்டும். அத்துடன் தமது சமய வழிகாட்டிகளாக வாழ்ந்தவர்களின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுப்பவர்களாகவும் அவர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றுபவர்களாகவும் இருக்கவேண்டும்.

இலங்கை நாட்டு மக்கள் தமது சமயம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் மீள நம்பிக்கை கொள்ளுமாறு அஞ்சா நெஞ்சோடு அரும்பணி ஆற்றிய வண. மிகெட்டுவத்தே குணானந்த, வண. அநகாரிக தர்மபால போன்ற தேசியப் பெருமக்களுக்கு பௌத்தமத வரலாற்றிலே தனித்துவம் மிக்கதோர் இடம் உண்டு. இந்தத் தேசியப் பெருமக்கள் வரிசையிலே, இலங்கையில் வாழுகின்ற சைவசமய மக்களிடையே சமய, கலாசார விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, சைவத் தமிழ் மக்களின் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்து, கலாசார மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கிச் செயற்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் போற்றப்பட வேண்டியவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்து 200 வருடங்கள் (18.12.1822) ஆகின்ற நிலையில், எதிர்வரும் ஆண்டினை, "நாவலர் ஆண்டு" எனப் பிரகடனப்படுத்தி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை நினைவு கூர்ந்து அவரது சமய, கல்வி மற்றும் சமூகப்பணிகளை முன்னெடுக்கும் பல்வேறு செயற்பாடுகளை , இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டுதலில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் இச்செயற்பாடுகளிற்கான அங்கீகாரத்தையும் அதற்கான முழு ஆதரவினையும் வழங்குவதை, இலங்கைத் திருநாட்டின் சமய சக வாழ்வுக்கான நல்லதொரு சமிக்ஞையாகவே கருதுகிறேன். இந்த நிகழ்ச்சித் திட்டம் சிறப்புப் பெற வாழ்த்துகிறேன். இலங்கை மாதாவின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் ஒற்றுமையோடு இந்த நாட்டைச் சுபீட்சம் அடையச் செய்வோம். சமய சக வாழ்வு அதற்கு ஒரு கருவியாக அமையட்டும்.

**மஹிந்த ராஜபக்ஷ**
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமர்

# 'நாவலர் ஆண்டு' - பிரகடனத்தை ஏற்று, பிரதமரால் அங்கீகாரக் கடிதம் வழங்கிவைப்பு









ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200 ஆவது பிறந்த ஆண்டினை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் எதிர்வரும் ஆண்டினை நாவலர் ஆண்டாக முன்மொழியப்பட்ட 'பிரகடனத்தை ஏற்று, அது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் பிரதமர் அவர்களால் அதற்கான அங்கீகாரக் கடிதம் வழங்கிவைக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்விலே, நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள், கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்திற்குரிய அக்ஷராத்மானந்த மகராஜ் சுவாமிகள், பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுரேன் ராகவன் அவர்கள், பிரதமரின் இணைப்புச் செயலாளர் திரு. கீதநாத் காசிலிங்கம் அவர்கள், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு.அ.உமாமகேஸ்வரன் அவர்கள், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாட் பணிப்பாளர்கள் திரு.எஸ்.தில்லைநடராஜா அவர்கள் மற்றும் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள், திணைக்கள ஆலோசனைச் சபை உறுப்பினர் கலாநிதி. கு.இரகுபரன் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் திரு.சி.தனபாலா அவர்கள், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் செயலாளர் திரு.வே.கந்தசாமி அவர்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் உறுப்பினர்கள் திரு.பெ.சுந்தரலிங்கம், திரு. ஜீ.வி.சுப்பிரமணியன், திரு.து.விக்னேஸ்வரன், திரு. ஏ.பீ. ஜெயராஜ், திருமதி. ஹேமலோஜனி குமரன் ஆகியோர் எனப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பிரகடன நிகழ்விலே, பிரகடனத்திற்கான அங்கீகாரத்தையும் முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கும் வகையில் கௌரவ பிரதமர் அவர்களால் அங்கீகாரக் கடிதம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்விலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகப்புகழ் புகழ் பெற்ற ஓவியர் திரு. மு. பத்மவாசன் அவர்களால் தத்ரூபமாக வரையப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் திருவுருவப் படைப்புகள் இரண்டு, பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ச அவர்களால் சமயத்தலைவர்கள் மற்றும் சமய நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது.



## நாவலர் பெருமானின் எண்ணங்கள் நனவாகட்டும்!

சைவத் தமிழ் உலகில் நாவலர் பெருமானுக்கென்று ஒரு தனித்துவமுண்டு. ஈழத்தில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியாகவும் நாவலர் பெருமானின் எண்ணங்களுக்கும் கனவுகளுக்கும் செயல்வடிவம் கொடுத்து நாவலரியலின் தோற்றத்திற்கு வித்திட்டவர்கள் எமது சபையினர் என்பது எமக்கு எப்போதும் மகிழ்வளிக்கும் விடயம்.

நாம் .எல்லோரும் பெருமைகொள்ளும் விதத்தில் நாவலர் பெருமானின் இருநூறாவது ஜனன வருடத்தினை நாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்திய இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தையும் அதற்கான அங்கீகாரத்தை வழங்கிய அரசினையும் சைவத்தமிழ் மக்கள் அனைவரினதும் சார்பாக, நாவலர் சபையினராகிய நாம். தலைவணங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

நாவலர் பெருமானைப் போன்றவொரு செயல் வீரனைச் சைவத்தமிழ் உலகம் இன்றுவரை கண்டதும் இல்லை - இனிமேற் காணப்போவதும் இல்லை. அத்தகைய மகத்தான வீரனுக்கு நாம் என்ன கைம்மாறு செய்தாலும் நம் பிறவிக்கடன் தீராது. ஆனாலும் சைவத் தமிழ் உலகமே ஒன்றிணைந்து நாவலர் கனவுக்குச் செயலுருவம் கொடுக்கும் செயற்பாட்டுக்கு ஒரு தொடக்கப்புள்ளியாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் 'நாவலர் ஆண்டு' எனப் பிரகடனப்படுத்திய தேரினை அனைவரும் ஒன்றுசேர்ந்து வடம்பிடிப்போம். நாவலர் எண்ணங்கள் நனவாகட்டும். நம் சைவத்தமிழ் உலகெங்கும் நாவலர் பெருமான் புகழ் ஓங்கி ஒலிக்கட்டும்.

**விடைக்கொடிச் செல்வர் திரு.சின்னத்துரை தனபாலா**
*தலைவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை*



## நாவலரின் கனவு எம்மண்ணிலே நின்று நிலைக்கட்டும்!

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் நம் சமூகத்தையும் நம்மவர் வாழ்வையும் உய்விக்க வந்த அவதார புருடர். தெளிந்த அறிவு - உன்னத ஆற்றல் - நெறிப்பட்ட ஒழுக்கம் - அடக்குமுறைகளுக்கு அஞ்சாத துணிவு - நீதியை நிலைநாட்டும் போராட்டக் குணம் - ஓய்வில்லாத செயலாற்றல் இப்படி ஒட்டுமொத்த ஆற்றலுந் திரண்ட வடிவமாய் நம்மண்ணில் உலாவிய நம்மை வழிப்படுத்த அரும்பாடுபட்ட பெருமகன் எங்கள் நாவலர் பெருமான்.அத்தகைய பெருமகனைக் கொண்டாடி மகிழ இத்தகைய ஒரு பிரகடனம் ஆஹா! எத்தகைய மகிழ்ச்சி

நாவலர் பெருமையை வளரும் நம் இளஞ் சந்ததியினரும் அறியத்தக்க வகையிலே எதிர்வரும் ஆண்டினை நாவலர் பெருமானுக்கான ஆண்டாகப் பிரகடனப்படுத்தி அதற்கேற்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் இந்து சமய, கலாசார அலுவல்க ள் திணைக்களத்திற்கும் உயர் பணிக்கு அங்கீகாரம் நல்கிய பிரதமர் அவர்களுக்கும் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நாவலரின் எண்ணங்கள் ஈடேறவும் அவரின் கனவுகள் இந்த மண்ணிலே நின்று நிலைக்கவும் எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. வே. கந்தசாமி**
*செயலாளர்,*
*அகில இலங்கை இந்துமாமன்றம்*



## நம் வாழ்விற்கு ஒளிதந்த பெருமகனின் எண்ணங்களுக்கு உயிரூட்டுவோம்!

சைவத் தமிழ் இனத்திற்கு ஒரு அடையாளம் தந்த எங்கள் பெருமகனார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அவதரித்த இருநூறாவது ஆண்டினை, 'நாவலர் ஆண்டு' என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் பிரகடனஞ்செய்ய, அதற்கு முழுமையானதொரு அங்கீகாரத்தை அரசாங்கம் மனமுவந்து வழங்கியுள்ளமை உண்மையிலே நம் சைவத்தமிழ் உலகம் செய்த தவப்பயன் எனக் கூறின் மிகையில்லை. இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க கைங்கரியத்தை ஆற்றிய அத்தனை நல்லுள்ளங்களையும் நாம் அனைவரும் வாழ்த்தி மகிழ்வோம்.

நம் இனத்துக்கான அடையாளம் - நம் மொழிக்கான அந்தஸ்து - நாடுகடந்தும் நம்மவரைச் சீரோடு வாழவைத்த பெருந்தகை - சமுதாயம் செழுமை பெறக் கல்விக் கண்கள் திறக்கப்பட வேண்டும் என்பதையும் - அறத்தின்வழி நாம் வாழ ஆன்மிகம் வழிகாட்ட வேண்டும் என்று வாக்கினால் உரைத்து, வாழ்ந்து வழிகாட்டிச் சென்ற பெருமகனுக்கு - நம் தேசத்தின் தேசிய வீரருக்கு, நாவலர் ஆண்டு நல்லதோர் அர்ப்பணமாகட்டும்.

தன்னை உருக்கி, நம் வாழ்விற்கு ஒளிதந்த பெருந்தகையாளனை, நாம் போற்றிச் செய்யும் இத்தகைய பணிகள், வளரும் இளம் சந்ததிக்கு நல்லதோர் வழிகாட்டி. இத்தகு சீர்மிகு பணிகளால் நல்லதோர் உலகு செய்வோம். ஆத்மார்த்தமான பணியை நாவலர் பெருமானின் புனித ஆத்மா என்றும் ஆசிர்வதிக்கும் என்பது எம் நம்பிக்கை.

**செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு.திருமுருகன்**
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை,*
*தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி ஆறு.திருமுருகன்



## சைவத்தையும் தமிழையும் கண்களாக கொண்டு கடமையாற்றும் செயல்வீரன்!

'அருவமும் உருவமுமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய'

என்கிறார் கச்சியப்பர். அதுபோல ஒரு திருமுருகனாக உலகுக்கு வந்தவர் ஆறு.திருமுருகன். தனது ஆரம்பக் கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும், பட்டப்பின் படிப்பைத் தேசிய கல்வி நிறுவகத்திலும் மேற்கொண்டார்.

### கல்விப்பணி

அதன் பின்னர் சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையில் ஆசிரியராகவும், அதன் பின்னர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகவும், உப அதிபராகவும், பிரதி அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். கற்பித்தல் துறையில் முழு ஈடுபாட்டுடன் கலாநிதி ஆறு.திருமுருகன் மிளிர்ந்த காரணத்தால் நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

### துர்க்காதேவி ஆலயத்தில் திருப்பணிகள்

தனது 32ஆவது வயதில் துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆன்மீகத்தாய் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் அன்புக் கட்டளையை ஏற்று அறநிதியசபை உறுப்பினராக 1993ஆம் ஆண்டு சேர்ந்து கொண்டார். தேவஸ்தான நிர்வாக சபையின் உறுப்பினராக 1995ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். 32 வருடங்களுக்கு மேலாக தேவஸ்தான தலைவராக உன்னத பணியாற்றிய சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் இழப்புக்குப் பின் ஆறு.திருமுருகன் தேவஸ்தான தலைவராக 2008ஆம் ஆண்டில் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 30ஆவது ஆண்டு விழாவில் சைவத்துக்கும் தமிழுக்கும்;, சமூகத்துக்கும் துர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றிவரும் சேவைகளை பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் நாவலர் விருது வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டது.

### சிவபூமி அறக்கட்டளை

மன வளர்ச்சி குறைந்த பிள்ளைகளை ஆற்றுப்படுத்தவென 2004ஆம் ஆண்டில் 12 பிள்ளைகளுடன் ஆறுதிருமுருகனால் கோண்டாவிலில் ஆரம்பிக்கப்பட்ட சிவபூமி சிறுவர் மனவிருத்திப்பாடசாலை இன்று 150 பிள்ளைகளை வழிப்படுத்துகின்றது. திருகோணமலையிலிருந்தும் கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலைக்குப் பிள்ளைகளைச் சேர்க்கத் தொடங்கியதை பார்த்த ஆறு.திருமுருகன், திருகோணமலையிலும் மனவிருத்திப்பாடசாலை ஒன்றை 2019ஆம் ஆண்டில் தொடங்கினார். திருகோணமலை ஆலய அறங்காவலர் சபை அன்பளிப்பு செய்த நிலத்தில், தொடர் சொற்பொழிவுகளால் தனக்குக் கிடைத்த நிதி ஊடாக இந்தப் பணியை நிறைவேற்றினார். இருமாடிக் கட்டடத்தில் மேலே யாத்திரிகர் விடுதியும் உள்ளது. உதவி தேவைப்படும் முதியவர்களைப் பராமரிக்க சுழிபுரத்தில் முதியோர் இல்லத்தை 2007ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். 11 முதியவர்களுடன் ஆரம்பமான இல்லம் இன்று 80 முதியவர்களை பராமரிக்கும் பெரும்பணியை சிறப்பாகச் செய்கின்றது. பன்னிரு அறைகளுடன் கீரிமலை நகுலேச்சரத்துக்கு பின்வீதியில் முதியோர் ஆச்சிரமம் ஒன்றை கிருஷ்ணபிள்ளை மடம் இருந்த இடத்தில் தற்போது அமைத்துக் கொண்டிருக்கின்றார்.

புனித பூமியாக மடங்களுடன் நிறைந்திருந்த கீரிமலை உள்நாட்டுப் போரால் மடங்கள் அற்றுக்காணப்பட்டதால் பல சைவ அன்பர்களின் வேண்டுதலுக்கு இணங்க 2010ஆம் ஆண்டில் சிவபூமி மடத்தைத் திறந்து வைத்தார். சிவபூமி மடத்துக்கு அருகில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பேருதவியால் சிவபூமி யாத்திரிகர் மடமும் சிவபூமி கலைக்களஞ்சியமும் உருவாக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு குப்பிளானில் சிவபூமி ஞான ஆச்சிரமத்தைத் திறந்தார். அன்னதானம், குருபூசைகள், அறநெறி வகுப்புகள் போன்ற பல சிவப்பணிகளோடு சிவனடியார்கள் தங்கி ஆறுதல் பெறவும், அறிவை வளர்க்க ஆன்மீக நூல் நிலையமும் இங்கு உள்ளது.

சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்களின் சுயதிறன் விருத்திக்காக சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை ஒன்றை கோண்டாவிலில் கொழும்பு மனிதநேய அறநிதிய அமைப்பின் பேருதவியுடன் ஆரம்பித்தார். கற்பூரம், கடதாசிப்பை, காகித உறை, தாவர வளர்ப்பு, நெய் விளக்கு, கமுகு மட்டை கோப்பை, கரண்டிகள் எனப் பல பொருள்களின் உற்பத்திப்பயிற்சி இங்கு நடைபெற்று வருகிறது. அச்சுப் பதிப்பு மற்றும் புத்தகம் கட்டுதல் போன்ற பணிகளுக்காக சிவபூமி அச்சகத்தை ஆரம்பித்தார்.

சிவதட்சணாமூர்த்தி திருக்கோயில், கருங்கல் இரதம், கருங்கல்லில் செதுக்கப்பட்ட 658 திருவாசகப் பாடல்கள், பதினொரு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிவபுரா ணம், 108 சிவலிங்கங்கள், அகத்தியர் கோயில் மற்றும் கோசாலை என பக்தி மயம் கமழும் திருவாசக அரண்மனையை நாவற்குழியில் அமைத்தார். இம்மண்ணை ஆண்ட 23 மன்னர்களின் உருவச்சிலைகள், புராதன பொருள்கள், அரிய புகைப்படங்கள், ஓவியங்கள் சூரியக்குடும்ப கட்டுமானம் எனப் பலவற்றை கொண்ட பிரமாண்டமான அரும்பொருள்காட்சியகத்தை நாவற்குழியில் 2020ஆம் ஆண்டில் அமைத்தார்.

தமிழ் மண்ணில் எல்லோருக்கும் மருத்துவ வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக மருத்துவர் க.பார்த்தீபன் உதவியுடனும், மருத்துவர் த.சத்தியமூர்த்தியின் ஒத்துழைப்புடனும் அபயம் இலவச மருத்துவ சேவைகளைத் தொடங்கினார்.

தெருவில் அதிகரிக்கும் கட்டாக்காலி நாய்களால் மக்களுக்கும் நாய்களுக்கும் பெரிய இடர்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க சிவபூமி நாய்கள் சரணாலயத்தை இயக்கச்சியில் ஆரம்பித்தார். பசுவதைகளைத் தடுத்து அவற்றை காப்பதற்காக கீரிமலை, சுழிபுரம், நாவற்குழி ஆகிய இடங்களில் கோசாலைகளை உருவாக்கினார். தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை நோயாளர்களுக்கு செவ்விளநீர், குடிதண்ணீர் என்பவற்றை வழங்க மருத்துவ நிதியம் ஒன்றை உருவாக்கினார். நாவற்குழியில் ஐயனார் ஆலயம் ஒன்று பராமரிப்பதற்காக மக்களால் சிவபூமி அறக்கட்டளையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக சைவ சமயத்துக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் மட்டுமல்லாமல், இன, மதங்களைக் கடந்து அளப்பெரும் சேவையாற்றிவரும் கலாநிதி ஆறு.திருமுருகன் நீண்ட உடலாரோக்கியத்துடன் தன் பணிகளை தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தொடர வேண்டும் என்பதே இன்றைய நாளில் ஈழத் தமிழர்களின் பேரவாவாக உள்ளது.

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்
வினோ நகைப் பூங்கா
தங்க வைர நகை வியாபாரம்
உரிமையாளர்,
சடாச்சரம் புவிச்சந்திரன்

அசல் 22 கரட்
தங்க நகைகள்
உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்
இல. 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5394, 021 222 9494, Fax: 021 222 2824

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்
கணேசன் ஸ்ரோஸ்
சாறி, சல்வார், ஆண்களுக்கான
சேட், ரீசேட் மற்றும்
சிறுவர்களுக்கான சகல
ஆடை வகைகள்
அனைத்தையும்
ஒரே கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ளலாம்
021 222 2830
077 445 7344
இல. 201, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்
சிறி இரும்புத் தொழிலகம்

உங்களுக்குத் தேவையான
சகல வடிவங்களிலும்
கதவுகள், ஜன்னல்கள்
வேண்டிய
டிசைன்களில்
செய்துதரப்படும்.
காங்கேசன்துறை வீதி, மல்லாகம்
T.P.: 077 071 2173, 077 185 1490

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்
பெஷன் ஹவுஸ்
சகலவிதமான எவர்சில்வர், அலுமினியம்,
கண்ணாடிப் பொருள்கள், பிளாஸ்ரிக்
பொருள்கள், இறப்பர் உற்பத்திகள்,
ஹோட்டல் பொருள்கள்
அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ளலாம்

T.P.: 021 222 8713, 076 717 7185
Fox No.-021 222 3034
fhjaffna@gmail.com
இல. 203, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணெயின் கேள்வி அதிகரிப்பு!



கொழும்பு, டிசெ. 18
இலங்கையில் நாளாந்தம் மண்ணெண்ணெயின் கேள்வி 100 மெற்றின் தொன்னால் அதிகரித்துள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாளாந்த மண்ணெண்ணெய்த் தேவை ஏறத்தாழ 500 மெற்றிக் தொன்னாக இருந்த நிலையில், கடந்த சில நாள்களாக நாளொன்றுக்கு 600 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது. உள்ளூர் சந்தைக்கு மண்ணெண்ணெய் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று மீனவர்களுக்குத் தேவையான எரிபொருளும் விடுவிக்கப்படும் என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ம-4-இ)

# கொள்கலன்களை விடுவிக்க 25 மில்லியன் டொலர் தேவை

கொழும்பு, டிசெ. 18
துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய சுமார் ஆயிரம் கொள்கலன்களை விடுவிக்க குறைந்தபட்சம் 25 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும் என்று இறக்குமதியாளர்கள் வர்த்தக அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

கொள்கலன்களில் அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு, சீனி மற்றும் பெரிய வெங்காயம் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கியுள்ளன. இவற்றை வெளியேற்றாவிட்டால் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் என்பவை கெட்டுப் போகும். அத்துடன் துறைமுகத்தில் கொள்கலன்கள் தேங்கியுள்ளமையால் தாமதக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலைமையும் ஏற்படும் என்றும் இறக்குமதியாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம-4-இ)

# எரிவாயு வெடிப்புக்கள் இறுதி அறிக்கை தயார்

கொழும்பு,டிசெ.18
நாட்டில் இடம்பெற்ற எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைவாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைச் சந்தித்து இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு காலம் கோரப்பட்டுள்ளது என்று குழுவின் தலைவரும், மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான சாந்த வல்பொல தெரிவித்துள்ளார்.

எரிவாயு நிறுவனங்கள், இலங்கை தர நிர்ணய நிறுவன அதிகாரிகள் மற்றும் நுகர்வோர் உள்ளிட்ட 40 தரப்பினரிடம் இது தொடர்பான வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)


## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 18.11.2021 வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**திருமதி பூமாவதி தனிநாயகம்**



அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி
வீட்டுக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை
19.12.2021 பகல் 10 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால்
அத்தருணம் தாங்களும் தங்களது குடும்ப
சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம
சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

இல. 43, 6ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம் வவுனியா.

குடும்பத்தினர்.
024 222 0515

(CS 009381)1-6


# நாடு பற்றியெரிகிறது அரசோ சுகபோகம்!

அநுர கொதிப்பு



**கொழும்பு, டிசெ. 18**
**நாடு பற்றி எரிகின்றது. ஆனால் அரச ஆட்சியாளர்கள், தங்களது சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கின்றனர் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

இலங்கையின் வலுச்சக்திக்கு யுகதனவி மின் உற்பத்தி நிலையம் மிகவும் முக்கியமானது. இதனை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு பஸில் ராஜபக்ச வழங்கியுள்ளார். யுகதனவி ஒப்பந்தத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க எவரும் முயற்சிக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தை ஏன் அரசு ஒளித்து வைத்திருக்க வேண்டும்?. நாடு பற்றியெரியும் நிலைமையிலும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். நாடு பற்றியெரிந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ம-4-இ)

# எரிவாயு விவகாரம் தெளிவூட்டுங்கள்

கொழும்பு, டிசெ. 18
எரிவாயுப் பிரச்சினை தொடர்பில் நிறுவனத் தலைவர்களும், அதிகாரிகளும் மக்களுக்கு உடனடியாக பதில் வழங்க வேண்டும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

நிறுவனத் தலைவர்களைத் தொலைபேசியூடாக தொடர்புகொள்ள முடியாதுள்ளது என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். அவர்கள் மறைந்திருக்க வேண்டிய தேவை கிடையாது. அரசை அபகீர்த்திக்குட்படுத்தாமல் மக்களுக்குப் பதில் வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-4-இ)

# குடாநாட்டில் விறகுக்கு மவுசு

யாழ்ப்பாணம், டிசெ. 18
யாழ். குடாநாட்டில் விறகுக்கு திடீரென நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. தெற்கிலிருந்து காட்டு விறகு வராததால் இங்குள்ள வேம்பு மற்றும் பூவரசு விறகுகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டிருப்பதாக விறகு விற்பனை நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், விறகுகளின் விலையும் திடீரென அதிகரித்துள்ளது. ஒரு கிலோ 15 ரூபாவாக விற்கப்பட்ட விறகு தற்போது ஒரு கிலோ 20 ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில், எரிவாயு அடுப்புக்கள், சிலிண்டர்கள் வெடித்து வருவதனாலும் மக்கள் விறகுகளை அதிகம் நாடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-ரி1-17)

# தரமான எரிவாயு சிலிண்டர்களை இலவசமாக வழங்குமாறு பணிப்பு

கொழும்பு, டிசெ. 18
தரமான எரிவாயுச் சிலிண்டர்களை நுகர்வோருக்கு இலவசமாக வழங்குமாறு லிட்ரோ மற்றும் லாப்ஸ் நிறுவனங்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறுகோரி, சிவில் சமூக ஆர்வலரான நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த ரிட் மனு தொடர்ந்து நான்காவது நாளாக நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ருவான் பெர்னாண்டோ மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



எதிர்காலத்தில் இலங்கைத் தர நிர்ணய நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்ட தரத்துக்கு அமைவான எரிவாயுச் சிலிண்டர்களை மாத்திரமே சந்தைக்கு வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

வீட்டு எரிவாயுச் சிலிண்டர்களில் புறொப்பேன் கலவையை 20 வீதத்தில் இருந்து 30 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று எரிவாயு நிறுவனங்கள் நீதிமன்றில் தெரிவித்தன. இந்த மனு எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ம-4-இ)

# எரிவாயு மாதிரிகள் தரமில்லை

கொழும்பு, டிசெ. 18
இரண்டாவது கப்பலில் பரிசோதிக்கப்பட்ட லிட்ரோ எரிவாயு மாதிரிகள் போதுமான தரத்தைக் கொண்டிருக்கவில்லை என்று நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

பரிசோதனை முடிவு களில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயற்கை உரம்

## விவசாயத்தில் தவிர்க்க முடியாத தாக்கம்



கம்சாயினி ரவீந்திரன்
27ஆம் அணி, விவசாயபீடம்,
யாழ். பல்கலைக் கழகம்

விவசாயிகளின் போராட்டங்கள், கடுமையான உணவுப் பற்றாக்குறை, தேயிலை ஏற்றுமதி பின்னடை வுக்குப் பிறகு இலங்கை இரசாயன உர இறக்குமதி மீதான தடையை நீக்கியுள்ளது. உர நெருக்கடி சர்வதேச உறவுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. வங்கி அமைப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சீனாவில் இருந்து கரிம உரத்தை இறக்குமதி செய்வதற்கான முயற்சிகள் மற்றொரு புயலை உருவாக்கின. இவையெல்லாம் சேர்ந்துதான் இந்தத் தடைநீக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது என்று கருதலாம்.

யாராவது கரிம உரங்களைப் பயன்படுத்த விரும்பினால் அவர்கள் அதைப் பயன்படுத்தட்டும். ஆனால் மற்றவர்கள் ஏன் அதைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர்? என்ற கேள்வி இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கான தடை மே 6ஆம் திகதி விதிக்கப்பட்டது. 'காலநிலை மாற்றத்துக்கான நிலையான தீர்வுகளுடன் ஒரு பசுமையான சமூக பொருளாதாரத்தை உருவாக்குதல்' என்ற கருப்பொருளின் கீழ் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட 20 நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். இது ஒரு நீண்ட கால உன்னத நோக்கத்தைக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், விவசாயத் துறையின் குறிக்கோளை அடைவதற்கு இந்தப் பரிந்துரைக்கப்பட்ட அணுகுமுறை கடினம். இது நாட்டில் தற்போதைய பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை பாதிப்பதோடு, உணவுப் பாதுகாப்பையும் அச்சுறுத்துகிறது. ஆயினும் அண்மையில், இரசாயன உரங்கள் தேயிலை மற்றும் அரிசித் தொழில்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. சமீபத்திய வாரங்களில் இருக்கும் கையிருப்புத் தீர்ந்து போகத் தொடங்கியதால் காய்கறிப் பயிர்கள் உற்பத்தி தோல்வியடைந்ததாகக் கூறி போராட்டங்களை நடத்திய விவசாயிகள் இரசாயன உரங்கள் மீதான தடையை எதிர்த்தனர். புதுமையான தொழில்நுட்பங்கள் இருந்தாலும், கரிம இயற்கை உரம் மட்டும் செடிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்தைச் சரியான நேரத்தில் மற்றும் அளவுகளில் வழங்கப் போதுமானதாக இருக்காது. உரங்கள் (கரிம அல்லது தாது) மூலம் தாவரங்கள், பயிர்கள் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதற்கான பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்தினால் மட்டுமே அதிக உற்பத்தித்திறனை அடைய முடியும்.

### இலங்கையில் உரத்தினுடைய இறக்குமதி மற்றும் பயன்பாடு!

கனிம உரங்களின் இறக்குமதி 1988ஆம் ஆண்டின் எண் 68இன் உர ஒழுங்குமுறைச் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இது தேசிய உரச் செயலகத்தின் கீழ் உள்ளது. இறக்குமதி செய்யப்படும் அனைத்து உரங்களும் அந்தந்த மாநில நிறுவனங்களின் ஆலோசனை மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் விவசாயத் துறையின் ஆராய்ச்சி நிறுவனங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. இறக்குமதி செய்யப்படும் அளவு, தற்போதுள்ள அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் அளவு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஆண்டுதோறும் முடிவு செய்யப்படும்.

அரசாங்க விதிமுறைகளின்படி, அனைத்து நெல் உரங்களும் (மானிய உரங்கள்) அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் பொறிமுறையின் மூலம் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்க முடியும். NFS வழங்கிய உரிமங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பிற வகையான உரங்களும் உள்ளன. மேலும், நெல்லுக்கான மானிய உரத்தைத் தவிர்த்து, NFS தனியாரிடம் ஒப்புக்கொண்ட ஒதுக்கீட்டு [illegible] பிற பயிர்களுக்கு உரங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கிறது. NFS வழங்கிய இறக்குமதி அனுமதி இல்லாமல் இலங்கையில் எந்த ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் (அரசுக்கு சொந்தமான அல்லது தனியார் துறை) உரங்களை இறக்குமதி செய்ய முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். உண்மையான பயிர்த் தேவைகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட, பயிரிடப்பட்ட நீடிப்புகளின் அடிப்படையில் இறக்குமதி அனுமதி வழங்கப்படுகிறது.

எனவே, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உரத்தின் அளவு தற்காலிக அடிப்படையில் அல்ல, தெளிவான அறிவியல் முறையின் அடிப்படையில் செய்யப்படுகிறது என்பது தெளிவாகிறது. விவசாயத் துறையின் ஆராய்ச்சி நிறுவனங்கள் பரிந்துரைத்தபடி NFS முடிவு செய்த அளவுகளில் விவசாயிகள் உரத்தைப் பெறவேண்டும். மேலும் நாட்டுக்குத் தேவையானவை மட்டும் அதிகமாக இல்லை!.

எவ்வாறாயினும், பல கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள், விவசாயிகள் உரங்களை அதிகமாகப் பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டுகின்றனர். இது அரச நிறுவனங்களால் மதிப்பிடப்பட்ட உண்மையான பயிர்த் தேவைகளின் அடிப்படையில் உர அளவுகள் இறக்குமதி செய்யப்படுவதால் கோட்பாட்டளவில் உண்மையாக இருக்க முடியாது. சரியான அளவு உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு அவற்றின் விநியோகம் ஒழுங்குபடுத்தப்பட்டால் (நாட்டுக்குள் சட்டவிரோதமாக உரம் நுழைவதில்லை என்று கருதினால்) அதிகப்படியான உரத்துக்கான கோரிக்கைகள் எழக்கூடாது.

உரம் அல்லது வேறு எந்த விவசாய உள்ளீடும் பெருமளவு மானியம் அளிக்கப்பட்டவுடன், அவற்றின் தவறான பயன்பாடு (mal) நடைமுறையாகும். இந்த சூழலில், அரச நிறுவனங்கள் மற்றும் NFS ஆகியவை உரத் தேவை மற்றும் இறக்குமதிகளுக்கு மிகவும் துல்லியமான மதிப்பீட்டைச் செய்திருந்தால், கிடைக்கக்கூடிய சிறந்த உர மானியத்தை (ஒரே நேரத்தில் அல்லது படிப்படியாக) நீக்கி, 'இரசாயன உரங்கள்' மற்றும் 'இயற்கை உரங்கள்' சந்தையில் எளிதில் கிடைக்க செய்து, விவசாயிகள் தங்களுக்கு எந்த உரம் பயன்படுத்துவது என்பது குறித்து நியாயமான முடிவை எடுக்க அனுமதியளித்திருக்க வேண்டும். இத்தகைய திறன் மேம்பாடு இல்லாமல், விவசாய இரசாயனப் பொருள்களை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது அதிகமாகப் பயன்படுத்துதல் மற்றும் அதன் மூலம் சுற்றுச்சூழலை மாசுபடுத்துதல் ஆகிய குற்றங்களை விவசாய சமூகத்தின் மீது சுமத்துவது புத்திசாலித்தனம் அல்ல.

### புதிய பழக்கம் அல்ல

நம் விவசாயிகளுக்கு இயற்கை உர பயன்பாடு அன்னிய பழக்கம் அல்ல. பயிர் உற்பத்தியில் 'இரசாயன உரங்களுடன் இயற்கை உரப் பொருள்களின் பயன்பாடு, சுற்றுச் சூழல் மாசுபாட்டைக் குறைப்பதற்கு பழங்காலத்திலிருந்தே பரிந்துரைக்கப்படுகிறது. விவசாயத் துறை 2015 முதல் விவசாய இரசாயன உரப் பொருள்களை தவறாகப் பயன்படுத்துவதை குறைப்பதற்காக நல்ல விவசாய நடைமு[illegible]துள் [illegible] முன்னர், விவசாய அமைச்சகம் 2021 யால பருவத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நெல் விவசாயிகளுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரங்களை 'இரசாயன' உரத்துடன் விநியோகிக்க திட்டமிட்டது. DOA பரிந்துரைப்படி இந்த IPNS ன் (integr ated plant nutrient systems) விகிதாசார உர ஒதுக்கீடு 30 % இயற்கை உரம், மற்றும் 70 % யூரியா , 50 % TSP மற்றும் 70% MOP. இயற்கை உரங்களின் விஷயத்திலும் இதே விகிதங்கள் பயன்படுத்தப்பட்டன. இது ஒரு சிறந்த முயற்சி.


இலங்கையில் புற்றுநோயின் அதிகரிப்புக்கான காரணியாக விவசாய இரசாயனங்கள் பற்றிய பிரபலமான பேச்சு மீண்டும் வெளிவந்துள்ளது. FAOSTAT வழங்கிய புள்ளிவிவரங்களின் படி படம் 1 இல் 2019 ஆம் ஆண்டு யூரியா இறக்குமதி அளவு 203,143 தொன்கள். இது கடந்த 2 தசாப்தத்தின் மிகக் குறைந்த 2 வது பெறுமானம் ஆகும். அத்தோடு, படம் 2 இன் படி, 2018 இல் அவுஸ்திரேலியாவில் ஒரு ஹெக்டேயர் பயிர் நிலத்தில் சேர்க்கப்பட்ட உரத்தின் அளவு 86 கிலோ. பங்களாதேஷ் 318 கிலோ மற்றும் இலங்கை 138 கிலோ. ஆனால் GLOBOCAN 2020 வழங்கிய புள்ளிவிவரங்கள் அவுஸ்திரேலியாவில் ஒரு லட்சம் மக்கள்தொகையின் வீதமாக புற்றுநோயின் ஐந்து வருட பாதிப்பு 3 ஆயிரத்து 172. பங்களாதேஷில் 164 பேர் மற்றும் இலங்கையில் 354 பேர் என்று தெரியவந்துள்ளது.




| DATE | VALUE |
|---|---|
| 2019 | 203,143 |
| 2018 | 252,901 |
| 2017 | 200,793 |
| 2016 | 211,184 |
| 2015 | 440,101 |
| 2014 | 453,691 |
| 2013 | 244,736 |
| 2012 | 314,749 |
| 2011 | 420,426 |
| 2010 | 358,715 |

(படம் 1)

(படம் 2)




தேசிய கொள்கைகள் ஆதாரங்களின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும். தேசிய பட்ஜெட்டின் இழப்பில் அவர்களின் விருப்பங்களும், அதை விரும்புவோரின் ஆலோசனைகளாலும் இயக்கப்படும் கொள்கைகள் தேசிய பொருளாதாரத்தில் தீங்கு விளைவிக்கும் மற்றும் மாற்ற முடியாத தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும், சமூகம் முழுவதும் நிரூபிக்கப்படாத மற்றும் அறிவியல் சாராத சித்தாந்தங்களின் பரவலானது, இலங்கை சமூகத்தில் உள்ள முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான காரணிகளை கண்டறிவதில் ஏற்கனவே முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 'ரசாயன' உரங்களின் இறக்குமதித் தடையானது, உணவுப் பற்றாக்குறை மற்றும் அதிக உணவு விலைகளுக்கு வழிவகுக்கும். ஜனாதிபதியும் அமைச்சரவையும் நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக முடிவுகளை எடுப்பதில், முன்னோடியில்லாத எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய சிலரால் பரப்பப்படும் சித்தாந்தங்களுக்கு இரையாகிவிடக்கூடாது. விவசாய இரசாயன உரப்பொருள்களின் இறக்குமதித் தடை அகற்றப்பட்டது தற்போது சரியான முடிவு. நாட்டின் வளர்ச்சிக்கான கொள்கைகளை உருவாக்கும்போது இனிமேல் இலங்கை அரசு அதிக பொறுப்புடன் இருக்க வேண்டும். இத்தகைய கொள்கைகள் மாற்றப்பட்டு சிறந்த தன்னிறைவுப் பொருளாதார வளர்ச்சியின் மூலம் வறுமையை ஒழிக்கவும் இன்னுமொரு உயிரியல் உலக போர்களுக்கு முகங்கொடுக்கவும் நிச்சயமாக நம் இளம் சந்ததி மாற்றம் பெறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் உண்டாகும். உங்களது செயல் இலாபத்தை நோக்கி நகரும். மகிழ்ச்சியான நாள். பிறர் மூலம் பாராட்டுக் கிடைக்கும். வழக்கு சாதக மாகும்.

**இடபம்:** வியாபாரத்தில் லாபம் உண்டு. எதிர்பார்த்த வெற்றி கிடைக் கும். பணச்சிக்கல் இருக்காது. தொழில், வியாபாரம் சூடு பிடிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடக்கும்.

**மிதுனம்:** திருமண முயற்சியில் சாதகமான பயன் கிடைக்கும். நண் பர்களிடம் கடந்த கால நினைவு களை கூறி மகிழ்ச்சி கொள்வீர்கள். குடும் பங்களைச் சேர்த்து வைப்பீர்கள்.

**கடகம்:** சிறு சிறு உடல் உபாதை களுக்கு மனம் பதற வேண்டாம். குடும் பத்தில் கலகலப்பு நிலவும். முயற்சி யில் வெற்றி பெறுவீர்கள். நண்பர்க ளின் இதமான பேச்சு மன ஆறுதலை அளிக்கும். திருப்பம் ஏற்படும்.

**சிம்மம்:** உங்களின் செயல் ஒன்று பலருக்கு மகிழ்ச்சியையும், நன்மை யையும் தரும். தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி வரும். உங்களின் அந்தஸ்து உயரும்.

**கன்னி:** சேமிக்க வேண்டுமென்ற ஆர்வம் அதிகரிக்கும். பயம் நீங்கும். குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரால் பெரிய நன்மை ஒன்று வரும். உங்க ளுடைய எதிர்பார்ப்புகளுக்கு தகுந்த ஒருவர் அறிமுகமாவார்.

**துலாம்:** தாயார் மகிழ்வார். யாரையும் மட்டம் தட்டிப் பேசவேண்டாம். மன சாட்சிக்கு விரோதமான செயல்களை எக்காலத்திலும் செய்யாதீர்கள். வியா பாரம் தழைக்கும். சகஊழியர்கள் உங் களை மதிப்பார்கள்.

**விருச்சிகம்:** சிறப்பான நாள். உடன் பிறந்தவர்கள் அன்பாக இருப்பர். மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும். நட்புக்கு முக்கியத்துவம் கொடுப் பீர்கள். எதிர்கால நலனுக்காகத் திட்ட மிடுவீர்கள்.

**தனுசு:** பிரியமானவர்களுக்காக சில விஷயங்களைச் செய்வீர்கள். உங்க ளால் உயர்ந்த சிலரை இன்று சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். பிறரால் பாராட் டப்படுவீர்கள். உங்களின் எதிர்பார்ப்பு பலிதமாகும் நாள்.

**மகரம்:** வீடு, வாகனத்தைச் சீர்செய் வீர்கள். மனக்குறை நீங்கும். புதிய திருப்பம் ஏற்படும். மற்றவர்களால் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை கூடும்.

**கும்பம்:** பணியாளர்களுக்கு பணிச்சுமை யால் உடல் அசதி வந்து நீங்கும். உற வினர்கள், நண்பர்களின் அன்புத் தொல்லைகள் உண்டு. உங்களது முன் கோபத்தால் நல்லவர்களை இழந்து விடாதீர்கள்.

**மீனம்:** சகோதர வகையில் உதவியும், அன்பும் கிடைக்கும். பலநாள் விரும்பிய பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள். மனதில் உற்சாகமும் செயல்களில் நேர்த்தியும் நிறைந்திருக்கும். லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

ஒமிக்ரோன் திரிபு

# எழுமாற்றுச் சோதனையில் தொற்றாளர் அடையாளம்!

**கொழும்பு, டிசெ. 18**

**இலங்கையில் ஒமிக்ரோன் பிறழ்வால் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்கள் மூவரில், ஒருவர் எழுமாற்றுப் பரிசோதனை மூலம் அடையாளம் காணப் பட்டுள்ளார் -என்று சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரி வித்துள்ளது.**



இது தொடர்பில் சங்கத்தின் தலை வரான ரவி குமுதேஷ் தெரிவிக் கையில்,

இலங்கைக்கு வந்த வெளிநாட்ட வர் ஒருவர் எழுமாற்று அடிப்படை யில் ஒமிக்ரோன் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் தனது சொந்த நாட்டுக்குத் திரும்பியபோதே சோதனைக்கு உட்பட்டார். பண்டாரநாயக்க சர்வ தேச விமான நிலையத்தில் பி.சி. ஆர். பரிசோதனையை சுகாதார அதிகாரிகள் இடைநிறுத்தியதன் விளைவாகவே இது ஏற்பட்டது.

இலங்கையில் இருந்தோ அல் லது பிறழ்வு அடையாளம் காணப் பட்ட நாட்டிலிருந்தோ வைரஸ் தொற்றுக்கான இரு சாத்தியக்கூ றுகள் நிலவுகின்றன. இவ்வாறு தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதால், நாட்டின் சுகா தாரக் கட்டமைப்புக்கும் பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் - என்றார். (ம-4-இ)

# பஸிலுக்குப் பதில் பீரிஸ் நியமனம்

பதில் நிதியமைச்சராக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நிய மிக்கப்பட்டுள்ளார். நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச டுபாய்க்குச் சென்றுள்ளதால், பதில் நிதியமைச்சராக, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நியமிக் கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ச கையளித்துள்ளார்.

(ம-4-இ)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மயிலிட்டி B.C.றோட், சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

Call: 076 8909 259
077 0150 353

(CS 863 B) 1-6


*எரிகாயமடைந்த ....*

யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி தோப்பு பகுதியைச் சேர்ந்த ரஜீலன் பத்மலோ ஜினி (வயது 31) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மனஅழுத்தம் காரணமாக ஏற்பட்ட விரக்தியில் அவர், கடந்த 15ஆம் திகதி தீ மூட்டினார், கடுமையான தீக்கா யங்களுக்கு உள்ளான அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்க ளிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-25)

*கனடா....*

ளார் என்று அந்தநாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். நமிர்தலதா பாலசிங்கம் (வயது - 56) என்பவரே கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார் என்று தெரி விக்கப்பட்டது.

வீதியில் நடந்து சென்றுக்கு கொண்டிருந்த பெண்ணை, வீடு ஒன்றிலிருந்து வெளியேறிய கார் திடீரென்று மோதி யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தை அடுத்து, வாகனத்துக்கு அடியிலிருந்த பெண்ணை வெளியே எடுத்து தீவிர சிகிச்சையளித்து காப்பாற்ற முயற்சித்த போதிலும் அது பயனளிக்க வில்லை என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசா ரணை மேற்கொண்டுள்ளனர். (த-இ)

# பாலியல் தொல்லை; முதியவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 18

பெண் ஒருவருக்கு பாலியல் துன்புறுத்தல் வழங்கிவந்தார் என்ற குற் றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 70 வய துடைய நபரை, 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித் துறை நீதிமன்று உத்தரவிட்டது.

நெல்லியடி கரணவாய் குருக்கள் பகுதி யைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கே அவ்வாறு தொல்லை ஏற்படுத்தியுள் ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அரந்தப் பெண் தினமும் பஸ் நிலை யத்துக்கு செல்லும்போது அந்த முதிய வர் வாய் மற்றும் கை சைகைகளை பயன்படுத்தி குறித்த பெண்ணுக்கு தொடர்ச்சியாக பாலியல் துன்புறுத்தல் வழங்கி வந்துள்ளார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

(த-25)


## Accounts Executives
## Tokyo Supermix (Pvt) Ltd - Jaffna

The right candidates should possess

- Full/part qualification in CIMA/ICASL/ACCA or any other Accounting body.
- Minimum of 3years' experience in a similar capacity.
- Proficient in MS Office packages.

Please forward your CV e-mail with names and contact details of two non-related referees & passport size colour photograph (embedded to CV) within 14 days. Please mention the post applied in subject of the e-mail. Only e-mail applications are entertained.

Emails: seelan@tokyocement.lk,
careers. rmc@tokyocement.lk

(cs.41698) (2.6)



## யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
## அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான இறுதிச் சந்தர்ப்பம்

மேற்படி எமது சங்கத்தில் அங்கத்தவராகவிருந்து நீண்ட காலமாக செயற்படாதிருக்கும் அங்கத்தவர்களாகிய உங்களை ஏன் சங்க அங்கத்துவத்திலிருந்து நிரந்தரமாக நீக்கக்கூடாது? என்பதற்கான ஞாயபூர்வமான காரணத்தை குறித்த அங்கத்தவர்கள் நேரடியாக சங்கத் தலைவர்/ செயலாளருடன் தொடர்பு கொண்டு 31.12.2021 ஆம் திகதிக்கு முன் விளக்கமளிக்கத் தவறினால் 01.01.2022 ஆம் திகதி முதல் நீங்களாக சங்கத்தில் இருந்து விலகிய தாக கருதப்படும் என்பதை மேற்படி சங்கத்தின் பொதுச் சபை சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்.
கா.பாஸ்கரன்

(CR 8302) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் இன்று இலவச மருத்துவ முகாம்

வவுனியா, டிசெ. 18

வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீலஷ்மி சமேத நரசிங்கர் கோவிலின் ஒழுங்கமைப்பில் இலவச மருத்துவமுகாம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த மருத்துவ முகாம் கோவிலின் கலாசார மண்டபத்தில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

கொழும்பு கொட்டாஞ்சேனை வட்ட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் நடைபெறவுள்ள குறித்த மருத்துவ முகாமில், இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்குதல், இலவச நீரிழிவு நோய் பரிசோதனை, இலவச குருதி அமுத்தப்பரிசோதனை ஆகிய சேவைகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும். (து-110)

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



மண்ணுலகில் 20 . 06 . 1944

விண்ணுலகில் 19 . 11 . 2021

19.11.2021 அன்று வீரபத்திரர் தாழ் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் ஸ்ரீமான் சின்னையா அழகானந்தம்

அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (18.12.2021) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆச்சியடி லேன்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

(CS 41701) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 10 . 1935



மறைவு 17 . 12 . 2021

### முருகேசு பரராஜசிங்கம்

(மஸ்கன்ஸ் கம்பனி இரத்மலானை - எழுதுவினைஞர்)

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், கொண்ட முருகேசு பரராஜசிங்கம் (எழுதுவினைஞர்) நேற்று (17.12.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீரங்கநாயகி அவர்களின் பாசமிகு கணவரும், துவாரகேசன், பத்மஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரன், இந்திரரஜனி ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற நவமணி மற்றும் ஜெயபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வனைஜன், வனையாழினி, பவிதாகினி, லக்ஷாயினி, லிபோயினி ஆகியோரின் பாசமிகு பேரனும், பாரததேவி காலஞ்சென்ற ரகுவரன் மற்றும் ஸ்ரீபத்மநாதன், ஸ்ரீசரவணபவன் காலஞ்சென்ற பார்க்கவிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2021) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகள் - பத்மஜா (சுகி)
மருமகன் - கிருபாகரன்
மைத்துனர் - ஸ்ரீசரவணபவன்

077 1159 641
077 1028 538

(CS 304) 1-6

## கண்ணீர் அஞ்சலி



இரணைப்பாலை, புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் நிறுவன வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட

திறமை மிக்க பணியாளர்

### வீரசிங்கம் ஸ்ரலின் ஜெயசிங்கம்

(கணினி வடிவமைப்பாளர்)

16.12.2021 வியாழக்கிழமை அகாலமரணமடைந்த வீரசிங்கம் ஸ்ரலின் ஜெயசிங்கம் (கணினி வடிவமைப்பாளர்) அவர்களின் அகால மரணச் செய்தியறிந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
பணிப்பாளரும், பணியாளர்களும்
கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.672B, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பிறப்பு : [illegible].10.1990

இறப்பு : 16.12.2021

(CR 8305) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

பிரதான வீதி, நாச்சிக்குடாவில் வதியும்
**மொஹமட் அஹ்லாக்**
**நிரோஜிக்கா** ஆகிய நான் எனது பெயரை
**மொஹமட் அஹ்லாக் பாத்திமா அப்ரா**
என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல
ஆவணங்களிலும் **மொஹமட் அஹ்லாக் பாத்திமா அப்ரா** என்றே கையொப்பம்
இடுவேன் என இலங்கை சோசலிச குடியர
சிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**மொஹமட் அஹ்லாக் பாத்திமா அப்ரா**

(cs.41695)(2.6)

## பெயர் மாற்றம்

பிரதான வீதி, நாச்சிக்குடாவில் வசிக்கும்
**முஹமட் அஹ்லாக் நிலுஜன்**
ஆகிய நான் எனது பெயரை **மொஹமட் அஹ்லாக் முஹமட் அஸ்லி** என
மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல
ஆவணங்களிலும் **மொஹமட் அஹ்லாக் முஹமட் அஸ்லி** என்றே கையொப்பம்
இடுவேன் என இலங்கை சோசலிச குடியர
சிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**மொஹமட் அஹ்லாக் முஹமட் அஸ்லி**

(cs.41695-B)(2.6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 30.03.1939 இறப்பு 18.11.2021

இந்துமா சபையின் தலைவராக
இருந்து அரும்பணி ஆற்றிய

**கார்த்திகேசு சச்சிதானந்தம்**
**(எழுத்தாளர் K.S. ஆனந்தன்)**

அவர்களுக்கு
எமது நினைவஞ்சலி

**நினைவுகளுடன்**
**இந்துமா சபை**
**இணுவில்**
**சிவகாமி அம்மன் கோவில்.**
**(இணுவில் கிழக்கு)**

(cs.41687)(2.6)

## 11ஆம் ஆண்டு நினைவலைகள்



**பஞ்சலிங்கம் செல்வராஜா**
(முன்னாள் சாரதி, DI, இ.போ.ச)

திதி: பூரணை

பண்பின் சிகரமாய் பாசத்தின்
- உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு
- வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
- இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டுகள் பதினொன்று மறைந்தாலும்
எம் உள்ளங்களில் என்றும்
- நிலைதிருக்கிறீர்கள்

பிறப்பு 13.06.1946 இறப்பு 20.12.2010

மில்லேன்
ஏழாலை மேற்கு.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.41697)(2.6)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிறீரஞ்சன் யதுர்சன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 24 |
| 05 | 12 |
| 1994 | 2015 |

திதி: பூரணை 18.12.2021

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் நிழலில்
சங்கமமாகி விட்ட ராஜாவே
உன்னைப் பிரிந்து நாம் - இங்கு
உளம் வருந்தும் வேளையிலும்
மீளாத்துயர் போக்க மீண்டும் வருவாயோ எம் உயிரே!
உந்தன் ஆத்ம சாந்தி வேண்டி கண்ணீர்துளிகளை
மலராக்கி நிற்கின்றோம்.

இக்கிரானை,
கந்தரோடை, சுன்னாகம்

குடும்பத்தினர்

(cs.895)(2.4.6)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை
## பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்கள் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. இப்பொருட்களை அலுவலக நேரங்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணிவரை மட்டுமே பார்வையிட முடியும்.

இடம் :- தலைமை அலுவலகம், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன் துறை. (கொல்லங்கலட்டி)
காலம் :- 28.12.2021 (செவ்வாய்க்கிழமை)
நேரம் :- காலை 10.30
குறிப்பு :- ஏலவிற்பனையில் பங்கு பற்றும் ஏலதாரர் மீளளிக்க கூடியதான பிணைப்பணம் ரூபா. 1000.00 செலுத்தப்பட வேண்டும்.

திரு.சோ.சுகிர்தன்
தவிசாளர்.
வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை

18.12.2021

(CR 36752) (3/6)

## பதவி வெற்றிடம்

### கூட்டுறவு அமைப்புகளின் தயாரிப்புகளினை சந்தைப்படுத்துதல்

| பதவி | கல்வி தகமை/ அனுபவம் |
|---|---|
| 1 x சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் | கூட்டுறவுத்துறை தொடர்பில் 3 வருட அனுபவம், 3 வருடத்திற்கு குறையாத சந்தைப்படுத்தல் அனுபவம், |

விண்ணப்பதாரிகள் lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொண்டு தங்கள் பதவிநிலைக்கான விதிமுறைகள் மற்றும் விண்ணப்ப படிவத்தை கோர வேண்டும். மார்கழி 27ம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்கள் மட்டுமே 2021 மார்கழி 29ம் திகதி நடைபெறவுள்ள நேர்காணலுக்கு உள்வாங்கப்படுவார்கள்.

**வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி,**
**கைதடி.**

**தலைவர்.**

(cr.36750) (2.6)

## ஏசியன் தளபாட நிலையத்தின் புதிய கிளை திறப்பு விழாவை முன்னிட்டு

### நத்தார் பண்டிகை மாபெரும் விலைக்கழிவு


### Electronic & Furniture

**washing machine (innovex) 5year warranty**



| | | | |
|---|---|---|---|
| Fully Automatic | (6 kg) | ~~55250~~/- | 40200/- |
| | (7 kg) | ~~61500~~/- | 45100/- |
| Semi Automatic | (6.5 kg) | ~~37500~~/- | 29500/- |

**Fridge (innovex) 10 year warranty**



| | | | |
|---|---|---|---|
| Single Door | 180 Ltr | ~~61000~~/- | 44990/- |
| Double Door | 180 Ltr | ~~65000~~/- | 48150/- |
| | 240 Ltr | ~~70000~~/- | 52100/- |
| | 250 Ltr | ~~85000~~/- | 63900/- |
| Inverter | 250 Ltr | ~~92000~~/- | 69450/- |

**Television (innovex) 3 year warranty**



| | | |
|---|---|---|
| 32 ``LED TV | ~~45000~~/- | 36150/- |
| 40" LED TV | ~~79000~~/- | 62950/- |

**Piyestra**



Matters (Piyestra)

| | | |
|---|---|---|
| Single (D/L) 6 x 3 | ~~5400~~/- | 3850/- |
| Double (D/L) 6 x 4 | ~~7050~~/- | 4970/- |



**Plastic Verandah Chair (Piyestra)**
(6 Chair + Teapow) ~~10400~~/- 8100/-

**Sofa3 + 1 + 1 (warranty Rexin - 2years**
**Body - 10 Years** ~~60000~~ 49000/-

**Piyestra sofa's and Office Furnitures 15% Discount**
**Piyestra Bedroom Suits 12.5% Discount**

INNOVEX Piyestra Nilkamal Panasonic Hisense DAXER

114, Navalar Road,
Jaffna.

021 222 6898

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் உணவகத்திற்கு பணியாளர்கள் தேவை. (ஆண் / பெண்)

காசாளர்
சமையல்காரர்
சமையல் உதவியாளர்

தொடர்புகளுக்கு: 071 322 3222


# மருத்துவர் சாபியை மீள அழைக்கவில்லை

கொழும்பு, டிசெ. 18

கருத்தடை சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள குருநாகல் போதனா மருத்துவமனையின் மருத்துவர் சாபி ஷிஹாப்தீனை மீள அழைப்பதற்கு இதுவரை தீர்மானிக்கவில்லை. அவர் தொடர்ந்தும் கட்டாய விடுப்பில் உள்ளார் என்று, அரச சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழு தெரிவித்துள்ளது.

சுகாதார செயலாளரின் ஆலோசனையின் பேரில், ஸ்தாபனங்கள் சட்டத்தின் 12 ஆவது அத்தியாயத்தின் 22 விதிகளுக்கு இணங்க, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டாய விடுப்பில் உள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் எஸ்.எச்.முனசிங்க, குருநாகல் போதனா மருத்துவமனையின் பணிப்பாளரிடம், மருத்துவர் ஷாபி ஷிஹாப்தீனின் சம்பள நிலுவையை செலுத்தி மீண்டும் பணியில் அமர்த்துமாறு கோரி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-இ)


## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 . 06 . 1989

உதிர்வு 28 . 12 . 2012



லிங்கநாயகம் மங்கையற்கரசி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### அமரர் சாரங்கன் (சாரு)

திதி : பூரணை (18.12.2021)

நீளும் காலப் பெருவழியில்
நீயும் நீளுகின்றாய் நினைவுகளுடன்
நிஜங்களை நிழலாக்கி கணப்பொழுதில் மறைந்து
நெருஞ்சி முள்ளாய் நெஞ்சுக்குள் குத்தும் வலி தந்து
ஒவ்வொரு நொடிப்பொழுதும்
மறையா உருவத்தோடு
புன்னகைத்து வலம் வருகிறாய்
ஒன்பது ஆண்டென்ன ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
அழியாது சாரு உன் நினைவலைகள்

03 ம் வட்டாரம்,
நெல்வரை,
நெடுந்தீவு.

குடும்பத்தினர்.

(cs.895) (2.4.6)



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 . 11 . 1970

மறைவு 18 . 12 . 2016



### திருமதி நிரஞ்சலா ஜெகசோதி

பெறுதலுக்கரிய பொக்கிஷமே
வீழ்த்த முடியா வைராக்கியமே
இருள் அழித்த ஒளியே
நிஜமாய் நீயில்லையே இனியே
துன்பம் துடைத்த தாயவளே
இன்பம் இழைத்த இனியவளே
பாசம் பழக்கிய பனிமலரே - இனி
எங்களுக்கு உன்னைப்போல் யாருளரே!

ஓய்ந்து விட்ட ஓவியமே
கரைந்து விட்ட காவியமே
வளரமுடியாத வளர்பிறையே - நீ
வரமுடியாதா மறுமுறையே!

(cr.36744) (2.6) குடும்பத்தினர்



## வேலைவாய்ப்பு

1. காசாளர் (பெண்) - Shop - கச்சேரிக்கு அருகாமையில்
2. கணக்காளர் (பெண்)-Accountant - Partly qualified
3. பயிலுனர் கணக்காளர் - ICASL Trainees

தொடர்பு: 077 036 0555

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை

- Technical Officer (with 2yrs experience)
- Technical Assistant
- Assistant Quantity Surveyor

தொடர்புகளுக்கு 077 724 5399
contractorsvaccancy@gmail.com
8.30 Am - 6.00 Pm தொடர்பு கொள்ளவும். (CS 41699B)(3.6)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

- அலுமினிய பொருத்துனர் - 1700.00 - 2000.00
- தச்சு வேலை - 1700.00 - 2000.00
- மேசன் - 1700.00 - 2000.00
- மேசன் உதவியாளர் - 1500.00
- பெயிண்டர் - 1500.00 - 2000.00
- வெல்டர் - 1700.00 - 2000.00

தொடர்புகளுக்கு : 077 724 5399
8.30 Am - 6.00 Pm தொடர்பு கொள்ளவும். (CS 41699B)(3.6)



## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் உள்நாடு வெளிநாடு அரச உத்தியோகம், உத்தியோகம் இல்லாத வரன்கள் எம்மால் தெரிவு செய்து தரமுடியும்.
முன்பதிவு கட்டணம் இல்லாமல்.
தொடர்புகளுக்கு: 077 973 3183



## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 . 02 . 1925

மறைவு 17 . 12 . 2013



### அமரர் அருணாசலம் நமசிவாயம்

(இளைப்பாறிய ஆசிரியர், புல்லாங்குழல் வித்துவான், கலாபூஷணம், வேணுகானமணி)

திதி:-பூரணை (18.12.2021)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் பாதாரவிந்தங்களில்
சாந்தியுடன் சங்கமித்திருக்கும் எம் அன்புத் தெய்வமே!
உங்கள் உயரிய வாழ்க்கையில்
அன்புத் தந்தையாய், அறிவூட்டிய ஆசானாய்,
அற்புதக் கலைஞனாய் நீங்கள் வாழ்ந்து காட்டி
எங்களையும் வாழவைத்து, நாங்கள் நல்வழியில்
வாழ வழிகாட்டிக் கொண்டிருக்கும் உங்களது
அன்புருவம் என்றென்றும் நிலைத்திருக்கும்
எம் மனத்திரையில்

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் நிலைத்திருக்கும் நினைவுகளுடன்

435/3, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(cs.41641) (2.4.6)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2022 ஆம் ஆண்டிற்கான பகிரங்க ஏல அறிவித்தல

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், பொதுமலசலகூடம், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2022.01.01ம் திகதி தொடக்கம் 2022.12.31ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT தவிர) | மாத வாடகை (VAT தவிர) |
|---|---|---|---|---|---|
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,291,225.00 | |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 170,335.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் பொதுமலசலகூடம் | 750.00 | 7,500.00 | 63,745.00 | |
| 5 | மருதனார்மடம் சந்தை (வாகனதரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 25,346,997.50 | |
| 6 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 198,550.00 | 250.00 |
| 7 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 66,619.75 | |
| 8 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 52,250.00 | |
| 9 | மயிலங்காடு ஆட்டிறைச்சிக்கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |

01. காலம்:- 23.12.2021 மு.ப 10.00
02. இடம் :- தலைமை அலுவலகம், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

[illegible]
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(cr.36753) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கில்....

வவுனியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்குக்கு இருநாள்கள் பயணம் மேற்கொண்ட சீனத் தூதுவர், யாழ்ப்பாணம், மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களின் பல பகுதிகளுக்கும்சென்று பல்வேறு இடங்களையும் பார்வையிட்டிருந்தார். அதன் மூலமாக வடக்கில் சில இடங்களை சீனா பொறுப்பேற்கும் என்ற கருத்து நிலவி வருகின்றது. அவ்வாறான திட்டம் ஏதும் இருப்பின், அது இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்ற கருத்தும் ஆழமாக முன்வைக்கப்பட்டுவருகின்றது. குறிப்பாக பருத்தித்துறை முனை, தீவகத்தின் சில பகுதிகள், மன்னார் பகுதி, இராமர் ஆறு பகுதி போன்ற இடங்களில் சீனத் தூதுவர் கூடுதல் கவனம் செலுத்தி ஆராய்ந்துள்ளார். இந்தநிலையில், அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் கருத்து அமைந்துள்ளது. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிமாவோ பண்டார நாயக்கா காலப்பகுதியிலிருந்து இலங்கையானது சீனாவுடனும், இந்தியாவுடனும் நெருக்கமான தொடர்புகளை பேணுகின்றது. அவருடைய காலப் பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டபோது எமது நாடு நடுநிலையாக செயற்பட்டிருந்தது. தற்போதும் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் முரண்பாடு நிலை காணப்படுகின்றது. அதனால் ஜனாதிபதியுடன் பேசியே முடிவுகளை எடுத்து வருகின்றோம்.

நாம் எந்த நாடுகளுக்கும் எமது பகுதிகளை விற்கவில்லை. எந்த நாட்டுக்கும் சார்பாக செயற்படவுமில்லை. இயற்கையான பகுதிகளில் அபிவிருத்தி செய்வதற்கு நாம் சில பகுதிகளை வழங்குகின்றோம். இதனால் எமது மக்களுக்கும் நன்மைகள் ஏற்படும்.

**எரிவாயு பிரச்சினை**

எரிவாயு சிலிண்டர் பிரச்சினை தொடர்பில் நாம் பேசியிருக்கின்றோம். தேவையான எரிவாயு சிலிண்டர்கள் இருக்கின்றபோதும் அதில் பிரச்சினைகள் உள்ளன. அதனை பாதிப்பு ஏற்படாத வகையில், பாதுகாப்பானதாக மக்களுக்கு வழங்க அரசாங்கம் என்ற வகையில் நடவடிக்கை எடுப்போம் - என்று தெரிவித்தார். (த-110)

### கீரிமலை....

பரப்புக்காணியை சுவீகரிக்கும், நில அளவைத் திணைக்கள அளவீட்டுப் பணி, மழைக்கு மத்தியிலும் நேற்று முறியடிக்கப்பட்டது.

முற்பகல் 9.15 அளவில் நில அளவைத் திணைக்களத்தினர் அந்தப் பகுதிக்கு வருகை தந்த நிலையில் குறித்த நில அளவையை பொதுமக்கள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு எதிர்ப்பை வெளியிட்டனர்.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து, பின்னர் கடற்படையின் தேவைக்காக சுவீகரிக்கப்படவிருந்த நிலையில், பல தடவைகள் பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில், தற்சமயம் நகர அபிவிருத்தி என்னும் பெயரில் காணி சுவீகரிக்கப்படவிருந்த காணிகளை அளவிடும் பணிகள் அந்தச் செயற்பாடு நேற்று முறியடிக்கப்பட்டது. இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இதே கட்சியின் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான, சிவாஜிலிங்கம், வலி.வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர்களான சஜீவன், கலையமுதன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். குறித்த பகுதியில்பொதுமக்களின் 21 வீடுகள் மற்றும் சமய கலாசார பிரதேசங்கள் இருக்கின்றன. காணி உரிமையாளர்களுக்கு குறித்த காணியை வழங்க விருப்பமில்லை எனவும் இனி வருகின்ற காலங்களில் தொடர்ச்சியாக குறித்த காணி அளவீட்டுக்கு வருகை தருவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அனைவராலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதோடு காணி உரிமையாளர்களால் எதிர்ப்பு வெளியிட்ட நிலையில் நில அளவைத்திணைக்களமும் நகர அபிவிருத்தி அதிகார சபையும் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றன. (த-125,26,319)

### ஆறு.திருமுருகனுக்கு....

இன்று நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் உள்ள அன்னபூரணி மண்டபத்தில் இன்று முற்பகல் 9 மணியளவில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (த)

(சிறப்பிதழ் உள்ளே)

### கொலைச்....

குற்றச்சாட்டில், பிரதான சந்தேகநபர் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த புதன்கிழமை முற்பகல் 11.30 அளவில் வவுனியா நெடுங்கேணி சேனைப்பிலவு பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த பெண்ணை வழிமறித்த ஒருவர், அந்தப் பெண் மீது நாட்டுத்துப்பாக்கியால் சூடு நடத்தினார். அதனால் படுகாயமடைந்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில் இரண்டு நாள்களின் பின்னர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

அந்தப்பகுதியிலுள்ள தோட்டக்காணி ஒன்றில் மறைந்திருந்தவேளை, அவர் நெடுங்கேணி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவரை கைதுசெய்ய முயற்சித்தபோது அவர் நஞ்சருந்தியுள்ளார். எனினும், அவரை பொலிஸார் உடனடியாக மீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்த்தனர். இதேவேளை, குறித்த நபருக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டில் மேலும் இருவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-110)

### பிறழ்வடைகிறது....

அழிவைச் சந்திக்கக்கூடும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களைத் தளர்த்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளமையானது ஏதாவது அழுத்தங்களுக்கு அடிபணிந்தா? என்பது தொடர்பில் சந்தேகம் எழுகின்றது என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் கண்டறியப்படும் சூழலில் பண்டிகைக் காலங்களில் பொதுமக்கள் சுகாதார ஆலோசனைகளைக் கடைப்பிடிக்காமல் செயற்படும்போது நாடு பெரும் அழிவை நோக்கி செல்லக்கூடும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அதிகாரிகள் கொரோனாத் தொற்றுநோய் குறித்த தரவுகளின் அடிப்படையில் இந்தத் தளர்வைச் செய்துள்ளனரா? அல்லது யாருடையதாவது அழுத்தங்கள் காரணமாக இவற்றைச் செய்கின்றனரா? என்ற பெரும் பிரச்சினை எங்களுக்கு உள்ளது.

எனினும், கொரோனாத் தொற்றுநோய் எதிர்காலத்தில் நாட்டில் அழிவை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. இந்தநிலையில், பண்டிகைக் காலத்தைப் பொதுமக்கள் கொண்டாடிய பின்னர் அதிகளவில் நோயாளிகள் பதிவாக வாய்ப்புண்டு. இப்போதும்கூட, ஊடகங்கள் மற்றும் உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களைவிட அடிமட்ட அளவில் அதிக நோயாளிகள் பதிவாகி வருகின்றனர்" - என்றார். (த-22)

### இராமர்....

அமைந்துள்ளது" என்றும் தெரிவித்தார். மூன்று நாள்களாக வடக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களுக்கு சென்று பார்வையிட்ட தூதர், தாழ்வுபாடு பகுதியில் அமைந்துள்ள ரின் மீன் தயாரிப்பு தொழிற்சாலையை நேற்று முற்பகல் பார்வையிட்டார். பின்னர், மன்னார் - தாழ்வுபாடு கடற்படை முகாமை நேற்று முற்பகல் சென்றடைந்தார். அங்கிருந்து தமது தூதரக பிரதிநிதிகளுடன் கடற்படைப் படகுகளில் இராமர் பாலத்தை நோக்கி புறப்பட்டார். இலங்கைக்கான சீன தூதரகத்தின் பிரதி பாதுகாப்பு தலைமை அதிகாரி கேணல் காஓ பின், தலைமை அரசியல் அதிகாரி லூஓ ச்சொங் உள்ளிட்டவர்களும் தூதுவருடன் இந்த பயணத்தில் இணைந்திருந்தனர்.

கடற்படை முகாமிலிருந்து புறப்பட்டவர்கள் சுமார் ஒரு மணித்தியாலம் பயணித்து இராமர் பாலத்துக்கு அருகே சிறு படகொன்றில் ஏறினர். 17 கடல் மைல் தொலைவிலுள்ள இராமர் பாலம் மணற்திட்டை சீனத் தூதுவர் உள்ளிட்டவர்கள் பார்வையிட்டனர். சுமார் 20 நிமிடங்களாக இரா ர் பாலத்தில் இருந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் உ ரிட்ட இராஜதந்திரிகள் பின்னர் அங்கிருந்து புறப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் - தாழ்வுபாடு பகுதியிலுள்ள கடற்படை முகாமுக்கு திரும்பிய சீனத் தூதுவரிடம் இந்தப் பயணம் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோது, "இதுவே முடிவு, ஆனால் ஆரம்பமும்கூட" என்று பதிலளித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

இதேவேளை, தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடி வரை 32 கிலோமீற்றருக்குள் 16 மணல் திட்டுக்களை கொண்ட பகுதி இராமர் பாலம் எனவும் ஸ்ரீ ராம்சேது என வணக்கத்துக்குரிய புனித பகுதியாகவும் பாரத மக்களால் போற்றப்படுகின்றது.

இந்த 16 மணல் திட்டுக்களில் 8 மணல் திட்டுக்கள் இலங்கைக்கும் எஞ்சிய 8 இந்தியாவுக்கும் உரியவை.

அண்மையில் இலங்கைக்கு வருகைதந்த பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர் சுப்பிரமணியன் சுவாமி, ராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக பிரகடனப்படுத்துவதில் பாரத பிரதமருக்கு உள்ள தடைகள் என்ன? என்று, ருவிற்றரில் வினவியிருந்தார்.

இதனிடையே, மன்னாரிலுள்ள இராமர் சேது பகுதிக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உள்ளிட்டவர்கள் கடந்த மார்ச் மாதம் பயணம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது, இந்திய உயர்ஸ்தானிகர் விசேட பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தார். (த-இ)

### அனைத்து....

னையுமே எம்மால் நிறைவேற்ற முடியாமல் நடைமுறைப்படுத்த முடியாமல் ஒரு முன்னேற்றத்தை அடைய முடியாமல் போய்விடும். அதனைச் சகலரும் மனதில் வைத்துக் கொண்டு செயற்பட வேண்டும்."

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் கடந்த புதன்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. வரவு செலவுத் திட்டத்தைக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் எதிர்த்திருந்தனர். ஆனாலும், வரவு செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இதன்மூலம் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் முதல்வராகத் தொடர்ந்தும் பதவி வகிக்க வாய்ப்புக் கிட்டியது. இவ்வாறானதொரு நிலையில், வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எடுத்த முடிவு தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் மாநகர சபையில் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் சமர்ப்பித்த 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டதுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்து வாக்களிப்பது தொடர்பில் எனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை. இந்தத் தீர்மானம் யாழ்ப்பாணத்தில் இருந்தவர்களால் எடுக்கப்பட்டது. எனவே, இது பற்றி கருத்துக்கூற நான் விரும்பவில்லை. ஆனால், எனது பொதுவான கருத்து என்னவெனில், உள்ளூராட்சி சபைக்கோ அல்லது மாகாண சபைக்கோ அல்லது நாடாளுமன்றத்துக்கோ தெரிவு செய்யப்படுபவர்கள் மக்களின் நன்மை கருதிச் செயற்பட வேண்டும். அரசியலுக்கு அப்பால் மக்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில் செயற்படுவதே அவசியமானதாகும்.

அதனை அடிப்படையாகக்கொண்டு சில முக்கியமான தீர்மானங்களை அவசியமான நேரங்களில் எடுக்கலாம் என்பதே எனது நிலைப்பாடு." என்றார். (த-22)

### வேந்தராகிவிட்ட...

ழக விரிவுரையாளர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியத்தினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதன் உச்சமாக பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்கப்போகின்றோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். பட்டமளிப்பு நிகழ்வில் கறுப்பு பட்டை அணிந்து கலந்துகொள்ள தீர்மானித்துள்ளோம் என்றும் மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர். மாணவர்கள் தங்களது பட்டத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை துணைவேந்தரிடம் வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-இ)

# உரக்கப்பலுக்கு இழப்பீடு: மைத்திரி கடும் எதிர்ப்பு!

**கொழும்பு, டிசெ. 18**
**நாட்டில் உணவுப் பொருள்களுக்கு தட்டுபாடு, நிதிப் பிரச்சினை, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், சீனாவின் உரக்கப்பலுக்கு ஒரு சதமேனும் கொடுக்கப்படுமிடத்து அதற்கு நாங்கள் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவிப்போம் -என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் உணவுப் பொருள்களுக்கு தட்டுபாடு, நிதிப் பிரச்சினை, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், சீனாவின் உரக்கப்பலுக்கு ஒரு சதமேனும் கொடுக்கப்படுமிடத்து அதற்கு நாங்கள் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவிப்போம். அமைச்சர்களோ அலலது விடயதானத்துக்குப் பொறுப்பானவர்களோ தான் சீனாவுக்குச் சென்று இந்த உரம் தொடர்பில் ஆராய்ந்து இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்திருப்பார்கள். அவர்கள் தொடர்பில் தற்போது எவ்வித தகவலும் இல்லை. எனவே அவர்களைக் கண்டு பிடித்து தண்டனை வழங்க வேண்டும். இந்தத் தவறைச் செய்தவர்களிடம் நிதியை அறவிட வேண்டும். சமையல் எரிவாயு ஆரம்பத்தில் ஒன்றிரண்டு வெடிக்கும் போதே, லிட்ரோ நிறுவனத்தின் பணிப்பாளர் சபை பதவி விலகியிருக்க வேண்டும். இல்லையேல் அரசு பதவி நீக்கியிருக்க வேண்டும். எரிவாயுவின் சமநிலையை மாற்றிய தொழிநுட்ப அதிகாரியை பதவி நீக்கம் செய்து அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. லிட்ரோ நிறுவனத்தின் பணிப்பாளர் சபை முதல் அதிகாரிகள் வரை அனைவரும் சுதந்திரமாக இருக்கின்றனர். -என்றார்.

(ம-4-இ)

## திரவ உரத்தை ஆராய விசேட குழு நியமனம்

கொழும்பு, டிசெ.18
உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவ உரம் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற்கு, விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
திரவ உரத்தைப் பயன்படுத்தியதன் பின்னர் விளைநிலங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் அறிக்கையிடுமாறு சம்பந்தப்பட்ட குழுவுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என்று விவசாயப் பணிப்பாளர் நாயகமான கலாநிதி அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.
இதேவேளை, இலங்கை உர செயலகமானது திரவ உர மாதிரிகளை மீண்டும் பரிசோதிக்கத் தீர்மானித்துள்ளது. அதற்கான மாதிரிகள் அந்தந்த உதவிப் பணிப்பாளர்களிடம் பெறப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
(ம-4-இ)

## தேயிலைச் செடிகளை இலவசமாக வழங்கத் திட்டம்

கொழும்பு, டிசெ. 18
அடுத்தாண்டு செய்கைக்காக தேயிலைச் செடிகளை இலவசமாக வழங்க பெருந்தோட்ட அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
இது தொடர்பில் பெருந்தோட்டத்துறை அமைச்சரான ரமேஷ் பத்திரன தெரிவிக்கையில், தேயிலைத் தோட்டங்களை சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை கண்காணிக்க வேண்டும். நீர் வழங்கல் திட்டங்களுக்கு சில நிதி உதவிகளும் வழங்கப்படும். கடந்த காலங்களில் இவ்வாறான திட்டங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் அது பின்பற்றப்படவில்லை. இது வெறும் பண விரயம். இவ்வாறான விடயங்கள் இம்முறை இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது. -என்றார்.
(ம-4-இ)

### தேயிலைச் செய்கைக்கு

## 63,000 மெற்றிக்தொன் இரசாயன உரங்கள்

கொழும்பு, டிசெ. 18
தேயிலைச் செய்கைக்குத் தேவையான 63 ஆயிரம் மெற்றிக் தொன் இரசாயன உரங்களை வழங்குவதற்கு, உர இறக்குமதியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.
பொதுத் திறைசேரியில் தமக்கு வழங்கப்பட வேண்டிய பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால் உரங்களைக் கோருவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று உர இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
நிதி அமைச்சுடன் கலந்துரையாடி இறக்குமதியாளர்களுக்குச் செலுத்தவேண்டிய தொகையில் ஒரு பகுதியை ஜனவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக அமைச்சர் அளுத்கமகே உறுதியளித்துள்ளார்.
உர இறக்குமதியாளர்கள் மற்றும் உள் ளூர் உர



உற்பத்தியாளர்கள், பெரும்போகத்துக்குத் தேவையான உரங்களைத் தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.
ஏற்கனவே தங்களுடைய களஞ்சியசாலைகளில் இருப்பில் வைக்கப்பட்டுள்ள உரத்தை கமநல அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு விநியோ கிக்கவும் இறக்குமதியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.
(ம-4-இ)

**பட வரைஞர் தேவை**
**(Draughtsman Vacancy)**
1-3 வருட அனுபவம்வாய்ந்த பட வரைஞர் - யாழ் இல் இயங்கிவரும் வடிவமைப்பு மற்றும் நிர்மாண நிறுவனத்திற்கு தேவை.
**E-mail CV/Biodata- jaffnacareer@gmail com**

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(லங்கா பாம் அருகாமை)
**077 6585 999**
**077 6234 204**

**தென்னந்தோட்டம் உடனடி விற்பனை**
எழுதுமட்டுவாழ் A9 வீதியிலிருந்து 1 km தூரத்தில் 453 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (தரகர் தேவையில்லை)
**077 232 0176, 077 239 0780**
(CS 41663) 1-6

**சுத்திகரிப்பாளர் தேவை**
யாழ் நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு சுத்திகரிப்பாளர் தேவை.
உங்கள் சுயவிவரக் கோவையுடன் இன்று (18.12.2021) சனிக்கிழமை, நாளை (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.
**'உதயன்'** பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கணக்கர் வளவு 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து **800 m** தூரம்.
பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: **077 814 7389**
**070 705 1655**
(CS 41662) 1-6

**வேலைவாய்ப்பு**
யாழ்.நகரில் இயங்கும்
எமது நிறுவனத்திற்கு இரவு நேர
**கிராபிக் டிசைனர் (Graphics Designer)** தேவை.



ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன்
**20.12.2021 திங்கட்கிழமை மாலை 05.00 மணிமுதல் 7.00 மணிவரை நேரில் சமுகம்தரவும்.**
**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.